tamilguru.lk


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2474/18 - 2026 පෙබරවාරි මස 02 වැනි සඳුදා - 2026.02.02

*2474/18 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**

நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக அரசாங்க சேவையில் உள்ள பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023 (2026)

நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக அரசாங்க சேவையில் உள்ள பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தகைமையுள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் "Our Services" என்பதன் கீழ் உள்ள "Online Applications – Recruitment Exams/ E.B. Exams" இல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை நிகழ்நிலை மூலமாக (Online) மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் பணிகள் 2026 பெப்புருவரி மாதம் 05 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026 பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதி பி.ப. 09.00 மணிக்கு நிறைவடையும்.

<u>குறிப்பு 1</u>

உத்தியோகத்தர்கள் விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தமது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவர்களிடம் கையளிக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி மற்றும் சேவை உறுதிப்படுத்தல் கடிதம் என்பவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதனை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எவ்வித அசௌகரிய நிலைமைகளுக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

1A - G 46216— 04 (2026/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

tamilguru.lk



குறிப்பு 2

இலக்கம் 2317 மற்றும் 2023.01.27 ஆம் திகதியுடைய வர்த்தமானப் பத்திரிகையில் "நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக அரச சேவையில் உள்ள பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2023" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, தாங்கள் 2023.02.10 ஆம் திகதிக்கு முன்னர் நிகழ்நிலை ஊடாக விண்ணப்பித்திருப்பின், அக்காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமானது இந்த வர்த்தமானி அறிவித்தலின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமாகக் கருதப்படும். எனவே, நீங்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை என்பதுடன், இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ள "குறிப்புகள்" மற்றும் "கவனத்தில் கொள்க" எனக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து கவனம் செலுத்திச் செயற்பட வேண்டும்.

**கவனத்தில் கொள்க -** மேலே குறிப்பு 2 இன் படி, நீங்கள் 2023.02.10 ஆம் திகதிக்கு முன்னர் நிகழ்நிலை ஊடாக விண்ணப்பித்த ஒருவராக இருந்தபோதிலும், தற்போது அரசாங்க சேவையில் இல்லாத ஒருவராயின், அந்த விண்ணப்பமானது இந்த வர்த்தமானி அறிவித்தலின் கீழ் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**02. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் முறை:**

2.1 இதற்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 10.1 ஆம் பிரிவின்படி எழுத்து மூலமான போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்படும்.

2.2 எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு வினாத்தாளுக்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்கு வரிசைப்படி, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இருமடங்கு (02) எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 10.2 ஆம் பிரிவின்படி பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பொது நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்ப் பட்டியல் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். (தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப் பரீட்சையின் போது நிராகரிக்கப்படுவர்.)

2.3 பொது நேர்முகப் பரீட்சையின் போது அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள், இந்த வர்த்தமானி அறிவித்தலின் 10.3 ஆம் பிரிவின்படி செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். செயன்முறைப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு/சம்பந்தப்பட்ட மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும். செயன்முறைப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்களுக்கு உரிய வெற்றிடங்கள் நிலவுகின்ற பட்டியல் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன், விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளுக்காகத் தமது விருப்பத்தை முன்னுரிமை வரிசைப்படி தெரிவிக்க வேண்டும்.

2.4 செயன்முறைப் பரீட்சை மற்றும் எழுத்துமூலப் பரீட்சையில் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை வரிசை, விண்ணப்பித்துள்ள மொழிமூலம், பாடம் மற்றும் பாடசாலை வகை என்பவற்றின் அடிப்படையில் பாடசாலை ரீதியாக நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

2.5 இந்த வர்த்தமானி அறிவித்தலுக்குரிய நியமனப் பாடங்களின் வெற்றிட விபரங்கள் அட்டவணை 05 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு மாத்திரமே ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

குறிப்பு 3

ஒரே பாடசாலைக்கு விருப்பத்தைத் தெரிவித்துள்ள பல விண்ணப்பதாரர்கள் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில், பாடசாலைகளுக்கான நிலைப்படுத்தல் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர்/ சம்பந்தப்பட்ட மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

2.6 இந்த ஆட்சேர்ப்பானது பாடசாலை ரீதியான வெற்றிடங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதால், ஐந்து (05) வருடங்கள் பூர்த்தியாகும் வரை எக்காரணம் கொண்டும் இடமாற்றங்கள் வழங்கப்பட மாட்டாது.

2.7 இந்த ஆட்சேர்ப்பின் போது தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகள் எனத் தனித்தனியாக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

2.8 நீங்கள் தேசியப் பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள் ஆகிய இரு (02) வகை பாடசாலைகளுக்காகவோ அல்லது ஒரு வகை பாடசாலைக்காகவோ மாத்திரம் உங்களது விருப்பத்தைத் தெரிவிக்க முடியும். அது குறித்து விண்ணப்பப்படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

2.9 தேசிய பாடசாலைகள்/மாகாணப் பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்கு மாத்திரம் விருப்பத்தைத் தெரிவிக்கும் விண்ணப்பதாரர்களின் பரீட்சை முடிவுகள், அவர்கள் விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட்டுள்ள நிரந்தர வதிவிட மாகாணத்தின் அடிப்படையில் அந்தந்த மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். 2022 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள மாகாணமே நிரந்தர வதிவிட மாகாணமாகக் கருதப்படும். (தேசிய பாடசாலைகளுக்கு மாத்திரம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் முடிவுகள் மாகாணங்களுக்கு அனுப்பி வைக்கப்பட மாட்டாது.)

2.10 ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் பின்வரும் விடயங்கள் பொருந்தும்.

2.10.1 ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் விண்ணப்பிக்கும் தேசிய/மாகாணப் பாடசாலைக்கு அமைய, விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழிமூலத்திற்கு வெற்றிடங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் கருத்திற் கொள்வதற்காக, நிரந்தர வதிவிட மாகாணத்திற்கு மேலதிகமாக மற்றுமொரு மாகாணத்திற்கு விண்ணப்பிக்க முடியும். அதன்படி, அந்த மேலதிக மாகாணத்தை விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

2.10.2 அவ்வாறு விண்ணப்பிக்கப்படும் மேலதிக மாகாணமானது, விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழிமூலத்திற்கு தேசிய/மாகாணப் பாடசாலைகளில் வெற்றிடங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் மாத்திரமே கருத்திற் கொள்ளப்படும்.

2.10.3 இதன்போது, மேலதிக மாகாணத்தில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு அந்த மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பு செய்த பின்னர், மேலும் வெற்றிடங்கள் காணப்படின் மாத்திரமே இந்த விண்ணப்பதாரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

**கவனத்தில் கொள்க:-** கிழக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரர்கள், கிழக்கு மாகாணத்தில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், தொழில்நுட்பப் பாடத்துறை மற்றும் ஆலோசனை ஆகிய பாடங்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

**03. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

3.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத் திட்டத்திற்கு உட்பட்டது.

3.2 இப்பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவதுடன், அந்த மூன்று (03) வருடங்களுக்குள் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

3.3 2020.10.16ஆம் திகதியுடைய பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றுநிருபங்களுக்கு அமைய, இந்த நியமனத்திற்குரிய அரச கரும மொழித் தேர்ச்சியை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3.4 இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14ஆம் திகதியுடைய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் மற்றும் திணைக்கள ரீதியான ஏனைய கட்டளைகளுக்கு இந்த நியமனம் உட்பட்டதாகும்.

3.5 2014.10.23 ஆம் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கும், அச்சேவைப் பிரமாணக் குறிப்பில் இனிமேல் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் மற்றும் அரசாங்க சேவையின் நியமனங்களுக்குரிய விதிகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

**04. சம்பள அளவுத்திட்டம் :**

இப்பதவிக்கு 2025.03.25ஆம் திகதியுடைய பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 10/2025 இன் கீழான சம்பளச் சுற்றுநிருபத்திற்கு அமைய GE 01-2025 இன் கீழ் ரூ. 53,060 - 800x6 - 940x7 - 1080x2 - ரூ. 66,600.00 (மாதாந்தம்) என்ற

சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 3 வகுப்பு I (அ) இற்காக இந்தச் சம்பள அளவுத் திட்டத்தின் 14 ஆவது சம்பளப் படிநிலையான ரூ. 64,440.00 இல் சம்பளம் நிர்ணயிக்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் அவ்வப்போது வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளுக்கும் தாங்கள் உரித்துடையவராவீர்கள்.

**05. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

5.1 2014.10.23 ஆம் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைய, 2023.02.10 ஆம் திகதியன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் மூலம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களை வழங்கும் நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட ஒரு பட்டத்துடன், குறிப்பு 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.1.2 பட்டப் பாடநெறியில் கற்றுள்ள பிரதான பாடம்/ பாடங்களுக்கு அமைய மாத்திரமே தொடர்புடைய ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் பாடத்திற்கு உரியவாறு தமது பட்டத்தின் மொத்தப் பாடநெறி கிரெடிட்டுக்கள் (Credit எண்ணிக்கையில்) 1/3 பங்கினைப் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

**மிக முக்கியம்:-** மேலே உள்ள 5.1.1 மற்றும் 5.1.2 நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

- தமது பட்டப்படிப்பிற்கு அமைய விண்ணப்பிக்கக்கூடிய பாடங்கள் குறித்து விண்ணப்பதாரர்கள் கவனத்துடன் இருத்தல் வேண்டும்.
- தகைமைகளைச் சரிபார்க்கும் போது, உயர் தரம் மற்றும் சாதாரண தர பாடத்திட்டங்களுக்கு ஏற்ப பட்டப்படிப்பில் உள்ள பாட உள்ளடக்கம் கருத்திற் கொள்ளப்படும்.
- விண்ணப்பிக்கும் பாடத்திற்கு இணையாக பிரதான பாடத்தைக் கொண்ட பட்டம் இல்லாத சந்தர்ப்பங்களில், பெற்றுக்கொண்ட பட்டத்துடன் மேலதிக தகைமைகளும் கருத்திற் கொள்ளப்படும்.
- பட்டப்படிப்பின் விரிவான பெறுபேற்றுப் பத்திரத்தில் (Transcript) பாட உள்ளடக்கம் (Credit எண்ணிக்கை) குறிப்பிடப்பட்டிருக்காவிடின், அதனைச் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் மூலம் உறுதிப்படுத்தி, அந்த ஆவணங்களைப் பொது நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.
- பட்டப்படிப்பின் பாட உள்ளடக்கம் தொடர்பாக எழும் சிக்கல்கள் குறித்து கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர்/ சம்பந்தப்பட்ட மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானது.
- பாடசாலைக் கட்டமைப்பில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் போது இரண்டு (02) கட்டங்களாகக் கருத்திற் கொள்ளப்படுவதால், ஒரு விண்ணப்பதாரர் க.பொ.த. (உயர் தரம்) மற்றும் 13 வருட காலத் தொடர்ச்சியான கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள பாடங்கள் பிரிவிலிருந்து இரண்டு பாடங்களுக்கும், க.பொ.த. (சாதாரண தரம்) மற்றும் ஏனைய பாடங்கள் பிரிவிலிருந்து இரண்டு பாடங்களுக்கும் விண்ணப்பிக்க முடியும்.
- இதன்போது க.பொ.த. (உயர் தரம்) மற்றும் 13 வருட காலத் தொடர் கல்வித் வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள பாடங்கள் பிரிவிற்கான ஆட்சேர்ப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

  **கவனத்தில் கொள்க-** கல்வி மறுசீரமைப்பு தொடர்பான தேசியக் கொள்கைகளின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடையும் வகையில், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் போது எந்தப் பாடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது குறித்து கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

5.1.3 இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் விதிகளுக்கு அமைய, ஒவ்வொரு விண்ணப்பதாரரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியை ஒரு பாடமாக எடுத்துச் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உள்நாட்டு க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்கு நிகராக அங்கீகரிக்கப்பட்ட ஏனைய பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பு 4

பின்வருமாறு ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் குறைந்தபட்ச தகைமைகளாகக் கருதப்படும்.

**1. க.பொ.த. (உயர் தரம்) பாடங்கள் மற்றும் 13 வருட காலத் தொடர் கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ள பாடங்கள்**

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 101 | இரசாயனவியல் Chemistry | நான்கு வருட விசேட பட்டமொன்றில் பிரதான பாடமாக அல்லது ஏனைய பாடமாக பட்டத்தின் மொத்தப் பாட உள்ளடக்கத்தில் (Credits) 1/3 பங்கினை க.பொ.த. (உயர் தரம்) பாடத்திட்டத்திற்கு அமையக் கற்றிருத்தல் வேண்டும்;<br>அல்லது<br>மூன்று வருடப் பட்டமொன்றில் மொத்தப் பாட உள்ளடக்கத்தில் குறைந்தது 1/3 பங்கினைச் சம்பந்தப்பட்ட பாடத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| 102 | பௌதீகவியல் Physics | நான்கு வருட விசேட பட்டமொன்றில் பிரதான பாடமாக அல்லது ஏனைய பாடமாக பட்டத்தின் மொத்தப் பாட உள்ளடக்கத்தில் (Credits) 1/3 பங்கினை க.பொ.த. (உயர் தரம்) பாடத்திட்டத்திற்கு அமையக் கற்றிருத்தல் வேண்டும்;<br>அல்லது<br>மூன்று வருடப் பட்டமொன்றில் மொத்தப் பாட உள்ளடக்கத்தில் குறைந்தது 1/3 பங்கினைச் சம்பந்தப்பட்ட பாடத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| 103 | உயிரியல் Biology | நான்கு வருட விசேட பட்டமொன்றில் பிரதான பாடமாக தாவரவியல்/தாவர உயிரியல் அல்லது விலங்கியலைக் கற்றிருத்தல் வேண்டும்; அத்துடன் பிரதான பாடம் தாவரவியல்/தாவர உயிரியலாக இருக்கும் போது ஏனையதொரு பாடமாக விலங்கியலையும், பிரதான பாடம் விலங்கியலாக இருக்கும் போது ஏனையதொரு பாடமாக தாவரவியல்/தாவர உயிரியலையும் குறைந்தது இரண்டு வருடங்களாவது உயர் தரப் பாடத்திட்டத்திற்கு அமையக் கற்றிருத்தல் வேண்டும்; அல்லது<br>மூன்று வருடப் பொதுப் பட்டமொன்றில் தாவரவியல்/தாவர உயிரியல் மற்றும் விலங்கியல் ஆகிய இரண்டு பாடங்களினதும் சேர்க்கையானது, மொத்தப் பாட உள்ளடக்கத்தில் குறைந்தது 1/3 பங்காக அமையும் வகையில் உயர் தரப் பாடத்திட்டத்திற்கு இணங்கக் கற்றிருத்தல் வேண்டும். |
| 104 | விவசாய விஞ்ஞானம் Agricultural Science | விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் (B.Sc. Agricultural Technology and Management)<br>விவசாயத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் (B.Sc. Agriculture)<br>விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் (B.Sc. Agricultural Resources Management and Technology)<br>விவசாய வணிக முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் (B.Sc. Agri Business Management)<br>ஏற்றுமதி விவசாயத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் (B.Sc. Export Agriculture |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 104 | விவசாய விஞ்ஞானம் Agricultural Science | மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டங்கள் அல்லது உயர் தர விவசாய விஞ்ஞானப் பாடத்திட்டத்திற்கு இணங்க மொத்தப் பாட உள்ளடக்கத்தில் 1/3 பங்கினை உள்ளடக்கிய பாடங்களைக் கொண்ட ஏதேனும் ஒரு விஞ்ஞானமானிப் பட்டத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் |
| 105 | இணைந்த கணிதம் Combined Mathematics | நான்கு வருட விசேட பட்டமொன்றில் பிரதான பாடமாகப் பிரயோக கணிதம் அல்லது தூய கணிதத்தைக் கற்றிருத்தல் வேண்டும்; அத்துடன் பிரதான பாடம் பிரயோக கணிதமாக இருக்கும் போது ஏனையதொரு பாடமாகத் தூய கணிதத்தையும், பிரதான பாடம் தூய கணிதமாக இருக்கும் போது ஏனையதொரு பாடமாகப் பிரயோக கணிதத்தையும் குறைந்தது இரண்டு வருடங்களாவது கற்றிருத்தல் வேண்டும்;<br><br>அல்லது<br><br>மூன்று வருடப் பொதுப் பட்டமொன்றில் பிரயோக கணிதம் மற்றும் தூய கணிதம் ஆகிய இரண்டு பாடங்களினதும் சேர்க்கையானது, மொத்தப் பாட உள்ளடக்கத்தில் குறைந்தது 1/3 பங்காக அமையும் வகையில் கற்றிருத்தல் வேண்டும். |
| 106 | பொறியியல் தொழில்நுட்பம் Engineering Technology | பட்டப்படிப்பின் மொத்தப் பாட உள்ளடக்கத்தில் 1/3 பங்கினை நிர்மாணம், இயந்திரவியல், மின் அல்லது இலத்திரனியல் ஆகிய பாடத்துறைகளை உள்ளடக்கியதாகப் பட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்; அல்லது<br>பொறியியல் பட்டத்தைப் (நிர்மாணம், இயந்திரவியல், மின் மற்றும்/அல்லது இலத்திரனியல்) பெற்றிருத்தல் வேண்டும். |
| 107 | உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் Bio Systems Technology | விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் (B.Sc. Agricultural Technology and Management)<br>விவசாயத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் (B.Sc. Agriculture)<br>விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் (B.Sc. Agricultural Resources Management and Technology)<br>உயிர் முறைமைகள் தொழில்நுட்பமாணிப் பட்டம் (BBST)<br><br>மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டங்கள்; அல்லது<br>உயர் தர உயிர் முறைமைகள் தொழில்நுட்பப் பாடத்திட்டத்திற்கு இணங்க மொத்தப் பாட உள்ளடக்கத்தில் 1/3 பங்கினை உள்ளடக்கிய பாடங்களைக் கொண்ட ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| 108 | தொழில்நுட் பத்திற்கான விஞ்ஞானம் Science for Technology | பட்டப்படிப்பின் மொத்தப் பாட உள்ளடக்கத்தில் 1/3 பங்கினைப் பௌதிகவியலாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டத்தைக் கற்றிருத்தல் வேண்டும். |

| பாடக் குறியீடு | பாடம் | தகைமைகள் |
|---|---|---|
| 109 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் Information & Communication Technology | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஒரு விசேட பட்டம், அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பட்டம் இருத்தல் வேண்டும். பட்டப்படிப்பிற்குரிய மொத்தப் பாட உள்ளடக்கத்தில் 1/3 பங்கானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்திற்குரியதாக இருத்தல் வேண்டும். |
| 110 | கணக்கீடு Accounting | கணக்கீடு தொடர்பில் ஒரு விசேட பட்டம் அல்லது கணக்கீட்டைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல் |
| 111 | வணிகக் கல்வி Business Studies | வணிகக் கல்வி அல்லது வியாபார முகாமைத்துவம் தொடர்பான ஒரு பாடத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 112 | வணிக புள்ளிவிபரவியல் Business Statistics | வணிகப் புள்ளிவிபரவியலைப் பிரதான பாடமாகக் கொண்ட அல்லது புள்ளிவிபரவியலைப் பாடமாக உள்ளடக்கிய ஏனைய ஏதேனும் ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 113 | அளவையியல் மற்றும் விஞ்ஞான முறை Logic and Scientific Method | அளவையியல் மற்றும் விஞ்ஞான முறை தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>அளவையியல் கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>அளவையியல் மற்றும் விஞ்ஞான முறையை ஒரு பிரதான பாடமாகக் கொண்டுள்ள ஏதேனும் ஒரு கலைமாணி (பொதுப்) பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 114 | பொருளியல் Economics | பொருளியலில் ஒரு விசேட பட்டம் அல்லது பொருளியலைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏனைய ஏதேனும் ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 115 | புவியியல் Geography | புவியியலில் தொடர்பில் கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>புவியியலைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு கலைமாணி (பொதுப்) பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 116 | அரசியல் விஞ்ஞானம் Political Science | அரசியல் விஞ்ஞானம் தொடர்பில் கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>அரசியல் விஞ்ஞானத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு கலைமாணி (பொதுப்) பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 117 | மனைப் பொருளியல் Home Economics | மனைப் பொருளியலில் பட்டத்தைப் பெற்றிருத்தல்; அல்லது ஏதேனும் ஒரு பட்டத்துடன் 2 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியைக் கொண்ட NVQ மட்டம் 4 அல்லது அதற்கு மேற்பட்ட மனையியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் அல்லது<br>ஏதேனும் ஒரு பட்டத்துடன் க.பொ.த. உயர்தரத்தில் மனையியல் பாடத்திற்கு 'A' அல்லது 'B' சித்தியைப் பெற்றிருத்தல். |
| 118 | வரலாறு (இலங்கை வரலாற்றுடன்) (இந்திய/ஐரோப்பிய/ நவீன உலக) History of Sri Lanka (Indian/ Europe / Contemporary) | வரலாற்றில் ஒரு கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது வரலாற்றைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு கலைமாணி (பொதுப்) பட்டத்தைப் பெற்றிருத்தல். |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 119 | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி Communication & Media Studies | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வியைப் பிரதான பாடமாகக் கொண்டுள்ள ஏதேனும் ஒரு கலைமாணி (பொது) பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 120 | பௌத்த நாகரீகம் Buddhist Civilization | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌத்த நாகரீகம், பௌத்த கலாசாரம், பௌத்த கற்கைகள், பௌத்த தத்துவம் மற்றும் பாளி ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு பட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் |
| 121 | கிறிஸ்தவ நாகரீகம் Christian Civilization | கிறிஸ்தவ நாகரீகம் அல்லது கிறிஸ்தவ சமயத்தைப் பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 122 | இந்து நாகரீகம் Hindu Civilization | இந்து நாகரீகம் அல்லது இந்து சமயத்தைப் பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 123 | இஸ்லாமிய நாகரீகம் Islamic Civilization | இஸ்லாமிய நாகரீகம் அல்லது இஸ்லாமிய சமயத்தைப் பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 124 | பௌத்த சமயம் Buddhism | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌத்த நாகரீகம், பௌத்த கலாசாரம், பௌத்த கற்கைகள், பௌத்த தத்துவம் மற்றும் பாளி ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு பட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 125 | இந்து சமயம் Hinduism | இந்து நாகரீகம் அல்லது இந்து சமயத்தைப் பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 126 | கிறிஸ்தவ சமயம் Christianity | கிறிஸ்தவ நாகரீகம் அல்லது கிறிஸ்தவ சமயத்தைப் பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 127 | இஸ்லாம் Islam | இஸ்லாமிய நாகரீகம் அல்லது இஸ்லாமிய சமயத்தைப் பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 128 | சித்திரக் கலை Art | சித்திரக்கலை/சிற்பக்கலை மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்துறையில் கட்புகல் கலைமாணி (விசேட) பட்டம் அல்லது,<br>சித்திரக்கலை/சிற்பக்கலை மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்துறையில் நுண்கலைமாணி (விசேட) பட்டம் (Bachelor of Fine Arts); அல்லது<br>சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து சம்பந்தப்பட்ட பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 129 | நடனம் (தேசிய) Dancing (Traditional) | சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அரங்கற் கலைமாணி (சிறப்பு) பட்டம் அல்லது<br>சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட நுண்கலையாணி (விசேட) பட்டம் அல்லது<br>சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| | | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து சம்பந்தப்பட்ட பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட அரங்கேற்றக் கலை / நுண்கலை / கலைமாணி விசேட பட்டத்தைக் கொண்டிருத்தல் (நியமன அதிகாரியினால் நடாத்தப்படும் உள்ளூர் நடனத் திறன்கள் தொடர்பான செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு) |
| 130 | நடனம் (பரதம்) Dancing (Bharatha) | சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அரங்கேற்றக் கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட நுண்கலையாணி (விசேட) பட்டம் அல்லது<br>சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து சம்பந்தப்பட்ட பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட அரங்கேற்றக் கலை / நுண்கலை / கலைமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 131 | கீழைத்தேய சங்கீதம் Oriental Music | சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அரங்கேற்றக் கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட நுண்கலையாணி (விசேட) பட்டம் அல்லது<br>சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து சம்பந்தப்பட்ட பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட அரங்கேற்றக் கலை / நுண்கலை / கலைமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 132 | கர்நாடக சங்கீதம் Carnatic Music | சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அரங்கேற்றக் கலைமாணி (விசேட) பட்டம் அல்லது,<br>சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட நுண்கலையாணி (விசேட) பட்டம் அல்லது,<br>சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கலைமாணி (விசேட) பட்டம் அல்லது,<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து சம்பந்தப்பட்ட பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட அரங்கேற்றக் கலை / நுண்கலை / கலைமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 133 | மேலைத்தேய சங்கீதம் Western Music | சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அரங்கேற்றக் கலை / நுண்கலை / கலைமாணி விசேட பட்டம்; அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து சம்பந்தப்பட்ட பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல் |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 134 | நாடகம் மற்றும் அரங்கற்கலை Drama & Theatre | சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அரங்கேற்றக் கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட நுண்கலையாணி (விசேட) பட்டம் அல்லது<br>சம்பந்தப்பட்ட பாடத்துறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகமொன்றிலிருந்து சம்பந்தப்பட்ட பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட அரங்கேற்றக் கலை / நுண்கலை / கலைமாணி விசேட பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 135 | சிங்களம் Sinhala | சிங்களத்தில் ஒரு கலைமாணி (விசேட) பட்டம் அல்லது சிங்களத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு கலைமாணி (பொதுப்) பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 136 | தமிழ் Tamil | தமிழில் ஒரு கலைமாணி (விசேட) பட்டம் அல்லது தமிழைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு கலைமாணி (பொதுப்) பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 137 | ஆங்கிலம் English | ஆங்கிலத்தில் ஒரு கலைமாணி (விசேட) பட்டம் அல்லது ஆங்கிலத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு கலைமாணி (பொதுப்) பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 138 | அரபு Arabic | சம்பந்தப்பட்ட பாடத்தைப் பிரதான பாடமாகக் கொண்டு கற்றுள்ள ஒரு வெளிநாட்டு மொழிப் பட்டம் அல்லது சம்பந்தப்பட்ட பாடத்தில் ஒரு விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 139 | பிரெஞ்சு French | |
| 140 | சீனா Chinese | |
| 141 | யப்பான் Japanese | |
| 142 | ஜெர்மன் German | |
| 143 | ரஷ்யன் Russian | |
| 144 | மலே Malay | |
| 145 | ஹிந்தி Hindi | |
| 146 | கொரியா Korean | |
| 201 | குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு Child Psychology and Care | குழந்தை உளவியலை ஒரு பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டம் அல்லது குழந்தை உளவியலும் பாதுகாப்பும் என்பதைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 202 | சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு Health and Social Care | சுகாதார மேம்பாடு தொடர்பான (விசேட) பட்டம்; அல்லது<br>சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பினைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 203 | உடற் கல்வி மற்றும் விளையாட்டு Physical Education and Sport | விஞ்ஞானமாணி (உடற்கல்வி) விசேட பட்டம் அல்லது விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமாணி பட்டம்; அல்லது உடற்கல்வி மற்றும் விளையாட்டைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 204 | அரங்கற் கலை Performing Arts | அரங்கற் கலை தொடர்பான சிறப்புப் பட்டம்; அல்லது<br>கலைமாணி – விசேட (அரங்கற் கலை/ நுண் கலை/ நடனம்/ சங்கீதம்) பட்டம்;<br>அல்லது<br>நாடகம் மற்றும் அரங்கற்கலை தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம் அல்லது கல்விமாணி (நாடகம் மற்றும் அரங்கற்கலை) பட்டம் அல்லது அரங்கற் கலை அல்லது நுண்கலையைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு சிறப்புப் பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 205 | நிகழ்ச்சி முகாமைத்துவம் Event Management | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவம் தொடர்பான முகாமைத்துவப் பட்டம்; அல்லது<br>நிகழ்ச்சி முகாமைத்துவத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல் |
| 206 | நுண்கலை Arts and Crafts | கட்புகல் கலை விசேட பட்டம் (சித்திரம், சிற்பம், அச்சுக்கலை, புடவை மற்றும் புடவை சார்ந்த கலைகள் போன்றவை); அல்லது<br>கட்புகல் கலை மற்றும் திட்டமிடல் விசேட பட்டம் (சித்திரக்கலை மற்றும் கிரபிக்) அல்லது<br>கட்புலம் மற்றும் தொழில்நுட்பக் கலை விசேட பட்டம்; அல்லது<br>கலைமாணி அல்லது நுண்கலையாணி விசேட பட்டத்தைக் கொண்டிருத்தல் (சித்திரக்கலை / கிரபிக் / சிற்பம் / கற்புல மற்றும் தொழில்நுட்பக் கலை ஆகிய பாடங்களை அல்லது ஒரு பாடத்தைப் பிரதானமாகக் கற்று இருத்தல் வேண்டும்) |
| 207 | உள்ளக வடிவமைப்பு Interior Designing | கட்டடக்கலை தொடர்பான விஞ்ஞானமாணி பட்டம் அல்லது வடிவமைப் புமாணி பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் கட்டடக்கலைப் பட்டம்; அல்லது உள்ளக வடிவமைப்பினைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 208 | நவநாகரீக வடிவமைப்பு Fashion Designing | கட்புகல் கலை விசேட பட்டம் (புடவை மற்றும் ஆடைக்கலை) அல்லது வடிவமைப்புமாணி பட்டம் அல்லது ஆடை வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மேம்பாடு தொடர்பான பட்டம்; அல்லது<br>நவநாகரீக வடிவமைப்பினைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 209 | கிரபிக் வடிவமைப்பு Graphic Designing | வடிவமைப்புமாணி பட்டம்; அல்லது<br>கட்புகல் கலை மற்றும் வடிவமைப்பு தொடர்பான கலைமாணிப் பட்டம் (சித்திரம் மற்றும் கிரபிக்); அல்லது<br>கணினிப் பொறியியல் தொடர்பான பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம்; அல்லது<br>கணினி விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம்; அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்; அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமாணிப் பட்டம்; அல்லது<br>பட்டப்படிப்பில் ஒரு பிரதான பாடமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைக் கொண்ட ஒரு பட்டம்; அல்லது |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| | | கணினி விஞ்ஞானப் பாடத்தை உள்ளடக்கிய விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது (மேற்குறிப்பிட்ட பட்டப் பாடநெறிகளில் மொத்தப் பாடப்பரப்பில் 1/3 பங்கினை கிரபிக் வடிவமைப்பு சார்ந்த பாடங்கள் கொண்டிருப்பதுடன் அவற்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்);<br>கிரபிக் வடிவமைப்பினைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 210 | நிலத்தோற்ற வடிவமைப்பு Landscaping | விவசாயம் தொடர்பான பட்டப்படிப்பில் தோட்டக் கலை/ நிலத்தோற்ற வடிவமைப்பு ஆகியவற்றை ஒரு பாடமாகக் கற்றிருத்தல் அல்லது<br>நிலத்தோற்ற வடிவமைப்பினைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 211 | பிரயோக தோட்டக் கலை தொழில்நுட்பக் கல்வி Applied Horticultural Studies | விவசாயம் தொடர்பான பட்டப்படிப்பில் தோட்டக் கலை / நிலத்தோற்ற வடிவமைப்பு ஆகியவற்றை ஒரு பாடமாகக் கற்றிருத்தல் அல்லது<br>பிரயோக தோட்டக் கலையை பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 212 | கால்நடை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி Livestock Product Studies | விவசாயப் பட்டப்படிப்பில் விலங்கு விஞ்ஞானம் / கால்நடை வளங்கள் உற்பத்தி தொழில்நுட்பம் ஆகியவற்றைச் விசேட துறையாகக் கற்றிருத்தல்; அல்லது<br>கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி விஞ்ஞானம் தொடர்பான பட்டம்; அல்லது<br>விலங்கு உற்பத்தி மற்றும் உணவுத் தொழில்நுட்பம் / கால்நடை உற்பத்தித் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 213 | உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி Food Processing Studies | உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம்; அல்லது<br>உணவு விஞ்ஞானம் மற்றும் போசணை தொடர்பான பட்டம்; அல்லது<br>விவசாயப் பட்டப்படிப்பில் உணவு விஞ்ஞானம் / உணவு உற்பத்தித் தொழில்நுட்பம் ஆகியவற்றைச் விசேட துறையாகக் கற்றிருத்தல்; அல்லது<br>உணவு உற்பத்தித் தொழில்நுட்பம் அல்லது உணவு பதனிடல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 214 | நீரியல் வளங்கள் தொழில்நுட்பக் கல்வி Aquatic Resource Studies | நீரியல் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் விலங்கியல் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம்; அல்லது<br>விவசாயப் பட்டப்படிப்பில் விலங்கியல் / கால்நடை உற்பத்தித் தொழில்நுட்பம் / நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் ஆகியவற்றை ஒரு பாடமாகக் கற்றிருத்தல்; அல்லது<br>விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம்; அல்லது<br>மீன்பிடி மற்றும் கடல்சார் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம்; அல்லது<br>நீரியல் வளங்கள் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல். |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 215 | பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி Plantation Product Studies | ஏற்றுமதி விவசாயம் தொடர்பான பட்டம்; அல்லது<br>விவசாயப் பட்டப்படிப்பில் பெருந்தோட்டப் பயிர்கள் / பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பம் ஆகியவற்றை ஒரு பாடமாகக் கற்றிருத்தல்; அல்லது<br>பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாகக் கற்றுப் பெற்ற ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 216 | நிர்மாணத் தொழில்நுட்பக் கல்வி Construction Studies | சிவில் பொறியியல் தொடர்பான பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம்; அல்லது<br>நிர்மாணம் மற்றும் கட்டிடச் சேவைகள் தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய பொறியியல் தொழில்நுட்பமாணிப் பட்டம்; அல்லது<br>தொழில்நுட்பமாணிப் பட்டம்; அல்லது<br>நிர்மாணத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஏதேனும் ஒரு பட்டம்; அல்லது<br>ஏதேனும் ஒரு பட்டத்துடன் 2 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியைக் கொண்ட அல்லது குறைந்தபட்சம் NVQ மட்டம் 4 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான நிர்மாணத் தொழில்நுட்பக் கற்கை தொடர்பான டிப்ளோமாவைக் கொண்டிருத்தல் |
| 217 | மோட்டார் இயந்திரவியல் தொழில்நுட்பக் கல்வி Automobile Studies | தொழில்நுட்பமாணிப் பட்டம் (மோட்டார் இயந்திரவியல்); அல்லது<br>பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம் (மோட்டார் இயந்திரவியல்); அல்லது<br>மோட்டார் இயந்திரவியல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல் |
| 218 | மின்சார மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி Electrical and Electronic Studies | மின் பொறியியல் தொடர்பான பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம்; அல்லது<br>பொறியியல் தொழில்நுட்பமாணிப் பட்டம்; அல்லது<br>பிரயோக இலத்திரனியல் தொடர்பான விஞ்ஞானமாணி விசேட பட்டம்; அல்லது<br>மின்சாரம் அல்லது இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 219 | புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைத் தொழில்நுட்பக் கல்வி Textile and Apparel Studies | வடிவமைப்புமாணி பட்டம்; அல்லது<br>புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைப் பொறியியல் தொடர்பான முதற்பட்டம்; அல்லது<br>தொழில்நுட்பமாணிப் பட்டம்; அல்லது<br>புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 220 | உலோக புனைவுத் தொழில்நுட்பக் கல்வி Metal Fabrication Studies | தொழில்நுட்பமாணிப் பட்டம் (இயந்திரவியல்); அல்லது<br>இயந்திரத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பொதுப் பட்டம்; அல்லது<br>உலோகப் புனைவுத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டம்; அல்லது<br>ஏதேனும் ஒரு பட்டத்துடன் குறைந்தபட்சம் NVQ மட்டம் 3 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான உலோகப் புனைவுத் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாவைக் கொண்டிருத்தல் |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 221 | அலுமினியம் புனைவுத் தொழில்நுட்பக் கல்வி<br>Aluminum Fabrication Studies | தொழில்நுட்பமாணிப் பட்டம் (சிவில் / நிர்மாணம் / இயந்திரவியல்); அல்லது<br>அலுமினியப் புனைவுத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டம்; அல்லது<br>ஏதேனும் ஒரு பட்டத்துடன் குறைந்தபட்சம் NVQ மட்டம் 3 அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான அலுமினியப் புனைவுத் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாவைக் கொண்டிருத்தல் |
| 222 | கணிணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு<br>Computer Hardware and Networking | தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம் / கணினிப் பொறியியல் தொடர்பான மூன்று வருட காலப் பட்டப்படிப்பு (அப் பட்டப்படிப்பிற்காகப் பின்வரும் பாடத்துறைகளுக்குரிய பாடக்கூறுகளைக் கற்றிருத்தல் வேண்டும்); அல்லது<br>தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம் / கணினிப் பொறியியல் தொடர்பான நான்கு வருட காலப் பட்டப்படிப்பு (அப் பட்டப்படிப்பிற்காகப் பின்வரும் பாடத்துறைகளுக்குரிய பாடக்கூறுகளைக் கற்றிருத்தல் வேண்டும்) அல்லது<br>கணினி விஞ்ஞானத்தைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு விஞ்ஞானமாணி அல்லது தொழில்நுட்பமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல் மற்றும் அதன் மொத்தப் பாடப்பரப்பில் மூன்றில் ஒரு (1/3) பங்கு பெறுமதியைக் கொண்ட பின்வரும் பாடத்துறைகளைக் கற்று சித்தியடைந்திருத்தல்.<br><br>பாடத்துறைகள்<br><br>i) Computer Hardware<br>ii) Computer system Engineering<br>iii) Computer Networks<br>iv) Computer Architecture<br>v) Operating System<br>vi) Electronics<br>vii) Arduino Technology<br>viii) IT Security<br>ix ) Network Security<br>x ) Information Security<br>xi ) Cyber Security<br>xii) Computer Hardware and Network related projects |
| 223 | உற்பத்தி<br>Manufacturing | இயந்திரப் பொறியியல் தொடர்பான மூன்று வருட காலப் பட்டப்படிப்பைக் கொண்டிருத்தல் |
| 224 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்<br>Tourism & Hospitality | சுற்றுலா முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>விருந்தோம்பல் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>விருந்தோம்பல் மற்றும் ஓய்வுநேர முகாமைத்துவம் தொடர்பான நிர்வாகமாணிப் பட்டம்; அல்லது<br>விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவப் பட்டம்; அல்லது<br>சுற்றுலா முகாமைத்துவப் விசேட பட்டம்; அல்லது<br>சுற்றுலா முகாமைத்துவப் பட்டம்; அல்லது<br>சுற்றுலா மற்றும் கலாசார வள முகாமைத்துவப் பட்டம்; அல்லது<br>சுற்றுலா மற்றும் விருந்தோம்பலைப் பிரதான பாடமாகக் கற்றுப் பெற்ற ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல் |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 225 | வழங்கல்கள் முகாமைத்துவம் Logistic Management | பட்டப்படிப்பிற்கு ஒரு பிரதான பாடமாக வழங்கல் முகாமைத்துவத்தைக் கற்றிருத்தல். |
| 226 | சந்தைப்படுத்தல் Marketing | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் அல்லது வணிக நிர்வாகம் அல்லது வியாபார முகாமைத்துவம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான ஒரு பட்டம் அல்லது வணிகமாணிப் பட்டம் அல்லது சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல் |

**2. க.பொ.த. (சாதாரண தரம்) மற்றும் ஏனைய பாடங்கள்**

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 301 | மாணவர் ஆலோசனை Counselling | உளவியல் / சமூகவியல் தொடர்பான ஒரு விசேட பட்டம்; அல்லது உளவியல் / சமூகவியல் தொடர்பான ஒரு பொதுப் பட்டம்; அல்லது ஏதேனும் ஒரு பட்டத்துடன்<br><br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ஒரு வருடத்திற்கு குறையாத ஆலோசனையியல் தொடர்பான ஒரு டிப்ளோமா பாடநெறி; அல்லது<br><br>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ஆலோசனையியல் தொடர்பான ஒரு வருடத்திற்கு குறையாத ஒரு பட்டப்பின் டிப்ளோமாவைக் கொண்டிருத்தல். |
| 302 | விசேட கல்வி Special Education | விசேட கல்வி தொடர்பான ஒரு பட்டம்; அல்லது உட்படுத்தல் கல்வி தொடர்பான ஒரு பட்டம்; அல்லது பேச்சு மற்றும் செவிப்புலன் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றைக் கொண்டிருத்தல் |
| 401 | விஞ்ஞானம் Science | இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல், தாவரவியல், விவசாயம் ஆகிய பாடங்களுள் எவையேனும் மூன்று பாடங்களைப் பட்டப்படிப்புப் பாடங்களாகக் கற்று சித்தியடைந்து ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தைக் கொண்டிருத்தல் |
| 402 | கணிதம் Mathematics | விஞ்ஞானமாணிப் பட்டம் (பௌதீகவியல்); அல்லது<br>பிரதான பாடங்களில் கணிதக் கூறுகளைக் கொண்ட பாடங்கள் மொத்தப் பாட உள்ளடக்கத்தில் (Credit எண்ணிக்கையில்) குறைந்தபட்சம் மூன்றில் ஒரு (1/3) பங்காக உள்ளடங்கிய ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல். |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 403 | சிங்கள மொழியும் இலக்கியமும் Sinhala Language & Literature | சிங்களம் தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது சிங்களத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு கலைமாணி (பொது) பட்டத்தைக் கொண்டிருத்தல் |
| 404 | தமிழ் மொழியும் இலக்கியமும் Tamil Language & Literature | தமிழ் தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது தமிழைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு கலைமாணி (பொது) பட்டத்தைக் கொண்டிருத்தல் |
| 405 | ஆங்கில மொழி English | ஆங்கிலம் தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது ஆங்கிலத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு கலைமாணி (பொது) பட்டத்தைக் கொண்டிருத்தல் |
| 406 | வரலாறு History | வரலாறு தொடர்பான கலைமாணி (சிறப்பு) பட்டம்; அல்லது<br>• வரலாற்றைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு கலைமாணி (பொது) பட்டத்தைக் கொண்டிருத்தல். |
| 407 | புவியியல் Geography | புவியியல் தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது புவியியலைப் பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனும் ஒரு கலைமாணி (பொது) பட்டத்தைக் கொண்டிருத்தல் |
| 408 | புவியியல் Civic Education | கலைமாணி விசேட பட்டம் (குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் / அரசியல் விஞ்ஞானம்) அல்லது கலைமாணி பொதுப் பட்டம் (குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் / அரசியல் விஞ்ஞானம்) உட்பட பெற்றிருத்தல். |
| 409 | வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி Business & Accounting Studies | வணிகப் பாடத்துறை சார்ந்த ஏதேனும் ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 410 | முயற்சியாண்மைக் கல்வி Entrepreneurship Studies | வணிகப் பாடத்துறை சார்ந்த ஏதேனும் ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 411 | பிரெஞ்சு French | பிரெஞ்சு மொழியைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 412 | ஹிந்தி Hindi | ஹிந்தி மொழியைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல் |
| 413 | ஜப்பான் Japanese | ஜப்பானிய மொழியைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல் |
| 414 | அரபு Arabic | அரபு மொழியைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல் |
| 415 | ஜெர்மன் German | ஜெர்மன் மொழியைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல் |
| 416 | சீனா Chinese | சீன மொழியைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல் |
| 417 | ரஷ்யன் Russian | ரஷ்ய மொழியைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல். |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 418 | கொரியா<br>Korean | கொரிய மொழியைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பொது அல்லது விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல் |
| 419 | இரண்டாம் மொழி (சிங்களம்)<br>2nd Language Sinhala | கலைமாணி விசேட பட்டம்; அல்லது<br>பொதுப் பட்டம் மற்றும் இரண்டாம் மொழியாக சிங்களம் எனின் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கற்று ஆகக்குறைந்தது ஒரு திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| 420 | இரண்டாம் மொழி (தமிழ்)<br>2nd Language Tamil | கலைமாணி விசேட பட்டம்; அல்லது<br>பொதுப் பட்டம் மற்றும் இரண்டாம் மொழியாக தமிழ் எனின் க.பொ.த. (சா. தர) பரீட்சையில் சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கற்று ஆகக்குறைந்தது ஒரு திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் |
| 421 | சங்கீதம் (தேசிய)<br>Music (Oriental) | தொடர்புடைய பாடத்தில் ஒரு அரங்கற் கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>தொடர்புடைய பாடத்தில் ஒரு நுண்கலைமாணிப் (விசேட) பட்டம்; அல்லது<br>தொடர்புடைய பாடத்தில் ஒரு கலைமாணிப் (விசேட) பட்டம்; அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றில் தொடர்புடைய பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட அரங்கற் கலைமாணி / நுண்கலைமாணி / கலைமாணிப் பட்டம் ஒன்றைக் கொண்டிருத்தல். |
| 422 | சங்கீதம் (மேலைத்தேய)<br>Music (Western) | தொடர்புடைய பட்டம் மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மேலைத்தேய சங்கீத பாடத்திற்காக A அல்லது B சித்தியைப் பெற்றிருத்தல்; அல்லது<br>தொடர்புடைய பட்டத்துடன் பின்வரும் தகைமைகளுள் ஆகக்குறைந்தது ஒரு தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்<br><br>Pass in Grade VI or above in Practical and Theory exams conducted by one the following institutions.<br><br>• Department of Examinations, Sri Lanka<br>• Trinity College of Music, London<br>• Royal Schools of Music, London<br>• London College of Music<br>• Institute of Western Music and Speech , Sri Lanka (IWMS) |
| 423 | சங்கீதம் (கர்நாடகம்)<br>Music (Carnatic) | தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட அரங்கற் கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட நுண்கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட கலைமாணி (விசேட) பட்டமொன்று; அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தொடர்புடைய பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட அரங்கற் கலைமாணி / நுண்கலைமாணி / கலைமாணிப் பட்டமொன்றைக் கொண்டிருத்தல். |

| பாடக் குறியீடு | பாடம் | தகைமைகள் |
|---|---|---|
| 424 | சித்திரம்<br>Art | சித்திரக்கலை/ சிற்பக்கலை பாடம் மற்றும் தொடர்புடைய பாடம் குறித்த கட்புலக் கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>சித்திரக்கலை/ சிற்பக்கலை பாடம் மற்றும் தொடர்புடைய பாடம் குறித்த நுண்கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட கலைமாணி (விசேட) பட்டமொன்று; அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தொடர்புடைய பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட பட்டமொன்று அல்லது<br>தொடர்புடைய பொதுப் பட்டத்தின் மொத்தப் பாட உள்ளடக்கத்தின் 1/3 பகுதி சித்திரக்கலைப் பாடத்தைக் கொண்டிருப்பதுடன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்திரக்கலைப் பாடத்திற்காக A அல்லது B சித்தியைப் பெற்றிருத்தல் |
| 425 | நடனம் (கீழைத்தேய)<br>Dancing (Oriental) | தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட அரங்கற் கலைமாணி (விசேட) பட்டம்; அல்லது<br>தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட நுண்கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட கலைமாணி (விசேட) பட்டமொன்று அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தொடர்புடைய பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட அரங்கற் கலைமானி / நுண்கலைமாணி / கலைமாணி விசேட பட்டமொன்றைக் கொண்டிருத்தல்<br>(நியமன அதிகாரியினால் நடாத்தப்படும் உள்நாட்டு நடனத் திறன்கள் குறித்த செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ்) |
| 426 | நடனம் (பரதம்)<br>Dancing (Bharatha) | தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட அரங்கற் கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட நுண்கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட கலைமாணி (விசேட) பட்டமொன்று அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தொடர்புடைய பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட அரங்கற் கலைமானி / நுண்கலைமாணி / கலைமாணிப் பட்டமொன்றைக் கொண்டிருத்தல் |
| 427 | நாடகமும் அரங்கியலும் (சிங்களம்/ தமிழ்)<br>Drama and Theatre | தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட அரங்கற் கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட நுண்கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>தொடர்புடைய பாடத்தின் கீழ் பெற்றுக்கொண்ட கலைமாணி (விசேட) பட்டமொன்று அல்லது<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தொடர்புடைய பாடத்திற்காகப் பெற்றுக்கொண்ட அரங்கற் கலைமானி / நுண்கலைமாணி / கலைமாணி விசேட பட்டமொன்றைக் கொண்டிருத்தல் |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 428 | இலக்கிய நயம் (சிங்களம்) Appreciation of Literary (Sinhala) | சிங்களம் தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>சிங்களம் ஒரு பிரதான பாடமாக உள்ள ஏதேனும் ஒரு கலைமாணி (பொது) பட்டமொன்றைக் கொண்டிருத்தல் |
| 429 | இலக்கிய நயம் (தமிழ்) Appreciation of Literary (Tamil) | தமிழ் தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>தமிழ் ஒரு பிரதான பாடமாக உள்ள ஏதேனும் ஒரு கலைமாணி (பொது) பட்டமொன்றைக் கொண்டிருத்தல் |
| 430 | இலக்கிய நயம் (ஆங்கிலம்) Appreciation of Literary (English) | ஆங்கிலம் தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>ஆங்கிலம் ஒரு பிரதான பாடமாக உள்ள ஏதேனும் ஒரு கலைமாணி (பொது) பட்டமொன்றைக் கொண்டிருத்தல் |
| 431 | இலக்கிய நயம் (அரபு) Appreciation of Literary (Arabic) | அரபு தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம் அல்லது<br>அரபு ஒரு பிரதான பாடமாக உள்ள ஏதேனும் ஒரு கலைமாணி (பொது) பட்டமொன்றைக் கொண்டிருத்தல் |
| 432 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் Information & Communication Technology | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான விசேட பட்டமொன்று அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட ஒரு பட்டத்தைக் கொண்டிருத்தல் |
| 433 | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் Agriculture & Food Technology | விவசாயம் தொடர்பான ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தில் / உயிர் முறைமைகள் தொழில்நுட்பமாணிப் பட்டத்தில் மொத்தப் பாட உள்ளடக்கத்தில் ஆகக்குறைந்தது 1/3 பகுதியை விவசாயப் பாடத்தில் பூர்த்தி செய்திருத்தல். |
| 434 | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் Aquatic Bio resources Technology | விவசாயம் தொடர்பான ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது<br>கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது<br>நீரியல் முகாமைத்துவம் மற்றும் விலங்கியல் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது<br>ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தில் மொத்தப் பாட உள்ளடக்கத்தில் ஆகக்குறைந்தது 1/3 பகுதியை நீரியல் உயிரியல் வளத் தொழில்நுட்பப் பாடத்தில் பூர்த்தி செய்திருத்தல் |
| 435 | நுண் கலை Art and Craft | கட்புலக் கலைமாணி விசேட பட்டம் (சித்திரம், சிற்பக்கலை, அச்சுக் கலை, புடவை மற்றும் புடவை சார்ந்த கலைகள் போன்றவை) அல்லது<br>கட்புலக் கலை மற்றும் திட்டமிடல் விசேட பட்டம் (சித்திரக்கலை மற்றும் கிரபிக்) அல்லது கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலைமாணி விசேட பட்டம் அல்லது கலைமாணி அல்லது நுண்கலைமாணி விசேட பட்டமொன்றைக் கொண்டிருத்தல் (சித்திரக்கலை / கிரபிக் / சிற்பக்கலை / கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலை ஆகிய பாடங்கள் அல்லது ஒரு பாடமாவது பிரதானமாக பயின்றிருத்தல் வேண்டும்) |

| *பாடக் குறியீடு* | *பாடம்* | *தகைமைகள்* |
|---|---|---|
| 436 | மனைப் பொருளியல் Home Economics | க.பொ.த (சாதாரண தர) மனைப் பொருளியல் பாடத்திற்கு A சித்தியைப் பெற்றிருத்தல்; *அல்லது* க.பொ.த (உயர்தர) மனைப் பொருளியல் பாடத்திற்காகத் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருத்தல்; *அல்லது* மனைப் பொருளியல் பாடத்திற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறியைப் பயின்று டிப்ளோமா; *அல்லது* சான்றிதழைப் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் பட்டதாரியாக இருத்தல்; *அல்லது* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் மனைப் பொருளியல் பாடத்திற்கான பட்டதாரியாக இருத்தல் |
| 437 | செயன்முறை மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் Practical and Technical Skills | க.பொ.த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பவியல் பாடத்துறைகளில் ஆகக்குறைந்தது 03 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதேனும் ஒரு பாடத்துறையில் பட்டதாரியாக இருத்தல் |
| 438 | வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் Design and Technology | தொடர்புடைய பாடத்துறையில் தொழில்நுட்பமாணி/பொறியியல் பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் பாடநெறி உள்ளடக்கத்தில் ஆகக்குறைந்தது 1/3 பகுதி பாடம் சார்ந்த கற்கைகளைக் கொண்டிருத்தல் அல்லது தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ், தேசிய உயர் தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் அதற்கு இணையான ஒரு வருடத்திற்குக் குறையாத பாடம் சார்ந்த கைத்தொழில் துறையிலான பாடநெறியைப் பயின்று அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதேனும் ஒரு பாடத்துறையில் பட்டதாரியாக இருத்தல் |
| 439 | சுகாதாரம் மற்றும் உடற் கல்வி Health and Physical Education | விஞ்ஞானமாணி (உடற் கல்வி) கௌரவப் பட்டம் அல்லது விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் குறித்த விஞ்ஞானமாணி கௌரவப் பட்டத்தைப் பெற்றிருத்தல் |
| 440 | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி Communication and Media Studies | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் தொடர்பான கலைமாணி (விசேட) பட்டம் அல்லது தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் ஒரு பிரதான பாடமாக உள்ள ஏதேனும் ஒரு கலைமாணி (பொது) பட்டமொன்றைக் கொண்டிருத்தல் |

5.1.4. வயது எல்லை:

2023.02.10 ஆம் திகதியன்று 45 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(அதற்கமைய, 2005.02.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1978.02.10 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவார்கள்.)

5.1.5. ஏனைய தகைமைகள்:

I. விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர்கள் சிறந்த நற்பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் 2023.02.10 ஆம் திகதியன்று பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

IV. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் மனத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்

V. இப் பரீட்சைக்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் தோற்றுவதாயின், அது குறித்து விண்ணப்பப்பத்திரத்தின் இலக்கம் 04 இன் கீழ் உள்ள II மற்றும் III ஆம் பிரிவுகளில் கட்டாயமாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்பதுடன், தொடர்புடைய மருத்துவச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்பத்திரத்தின் அச்சிடப்பட்ட பிரதியுடன் பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

<u>குறிப்பு 5</u>

மேலே குறிப்பு 2 இன் படி நீங்கள் ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விசேட தேவையுடைய விண்ணப்பதாரியாயின், ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்தின் பிரதியுடன் நீங்கள் எதிர்பார்க்கும் விசேட வசதி மற்றும் அண்மையில் பெற்றுக்கொண்ட மருத்துவச் சான்றிதழ்களுடன் கூடிய கோரிக்கையொன்றை மேலே 5.1.5.V இல் குறிப்பிடப்பட்டுள்ள தபால் முகவரிக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**06. விண்ணப்பிக்கும் முறை:**

6.1 நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பப் படிவமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/இல்லையா என்பது முறைமைக்குள் பிரவேசிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) ஊடாக அல்லது மின்னஞ்சல் செய்தி ஊடாக அறிவிக்கப்படும்.

நிகழ்நிலை விண்ணப்பத்திற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பொதுவான அறிவுறுத்தல் பத்திரத்தைப் (Common Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளுங்கள். விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது இவ்வறிவுறுத்தல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுங்கள். விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எவ்விதத் திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாகக் கருதப்படமாட்டாது. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

<u>குறிப்பு 6</u>

மேலே குறிப்பு 2 இன் படி நீங்கள் ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள ஒரு விண்ணப்பதாரராயின், மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இணையத்தளத்தில் இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள பிரவேசத்தின் ஊடாக உங்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளீடு செய்து ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் மென் பிரதியை மீண்டும் அச்சிட்டுப் (Re-print) பெற்றுக்கொள்ள முடியும்.

<u>குறிப்பு 7</u>

மேலே குறிப்பு 6 இன் படி ஏற்கனவே விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கு, உங்களது தேசிய அடையாள அட்டை இலக்கம் திருத்தப்பட்டமை அல்லது தொலைபேசி இலக்கம் திருத்தப்பட்டமை காரணமாக ஏதேனும் தடைகள் ஏற்பட்டிருப்பின், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் slexams@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்தியொன்றை அனுப்பி பிரவேசிப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

6.2 பரீட்சை நடைமுறை

6.2.1 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறும்

6.2.2 இந்த ஆட்சேர்ப்பு அறிவித்தலின் இறுதியில் உள்ள அட்டவணை 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரமே பரீட்சை நடத்தப்படும். விண்ணப்பதாரரினால் கோரப்படும் நகரம் அட்டவணை 04 இன் படி அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பித்த நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில், அந்த விண்ணப்பதாரர்கள் தங்களது இரண்டாவது விருப்பத்தெரிவாகக் குறிப்பிட்டுள்ள நகரத்தில் அல்லது அதற்கு அருகிலுள்ள வேறொரு நகரத்தில் அமைக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு வழிப்படுத்தப்படுவர். மேலும், முன்மொழியப்பட்ட அனைத்து நகரங்களிலும் அல்லது அவற்றில் பெரும்பாலானவற்றில் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்குப் போதுமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில், கொழும்பில் மாத்திரம் பரீட்சையை நடத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

6.2.3 ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இப்பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழிமூலத்திலேயே தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) நியமனப் பாடத்திற்கான மொழிமூலமாகக் கருதப்படும்

6.2.4 விண்ணப்பதாரர் ஒருவர் தனது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள பாடம், பாடங்களுக்கான விருப்பத் தெரிவு ஒழுங்கு வரிசை, விண்ணப்பிக்கும் மொழிமூலம் மற்றும் பரீட்சை நிலையம் என்பவற்றை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது

6.2.5 இப்பரீட்சை இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டது. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இரண்டு (02) வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டும். சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுவது கட்டாயமாகும்.

6.2.6 ஒரு தடவையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

6.3 ஒரு விண்ணப்பதாரருக்காக ஒரு விண்ணப்பப் படிவம் மாத்திரமே கருத்திற் கொள்ளப்படும்.

<u>குறிப்பு 8</u>

ஒரு விண்ணப்பதாரர் பல விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்படும் பட்சத்தில், அவரால் இறுதியாக நிகழ்நிலை ஊடாகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் மாத்திரமே கருத்திற் கொள்ளப்படும்.

6.4 பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை தனது நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

<u>குறிப்பு 9</u>

மேலே குறிப்பு 2 இன் கீழ் உள்ளடங்கும் விண்ணப்பதாரர்கள் அக்காலப்பகுதியில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது உள்ளீடு செய்த தேசிய அடையாள அட்டை இலக்கம், தற்போது ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் திருத்தப்பட்டிருப்பின், அத்திருத்தங்கள் தொடர்பான விபரங்களைப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தில் உள்ளடக்க வேண்டும். அத்திருத்தங்களை உறுதிப்படுத்துவதற்கான தகவல்களைச் சமர்ப்பித்து, தனது நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் கையொப்பத்தை உறுதிப்படுத்திச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் நிகழ்நிலை ஊடாக மாத்திரமே வெளியிடப்படும். அனுமதிப்

பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன் அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இணையத்தள அறிவித்தல் மூலமாக அல்லது விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி ஊடாக அறிவிக்கப்படும். தமது அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர் எவராவது இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் அது குறித்து வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு, இணையத்தள அறிவித்தலில் வழங்கப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்குக் கோரிக்கை கடிதமொன்றை அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு வினவும் போது, பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நகல் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் நகல் பிரதி என்பவற்றைத் தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமானதாக அமையும். அனுமதிப் பத்திரத்தைப் பரிசோதித்துப் பார்த்து, திருத்தங்கள் ஏதேனும் இருப்பின், முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பத்திற்கு அமைய உரிய திருத்தங்களை மேற்கொண்டு கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் அல்லது நேர்முகத் தேர்வின் போது முன்வைக்கப்படும் திருத்தங்களுக்கான கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

<u>குறிப்பு 10</u>

மேலே குறிப்பு 2 உடன் தொடர்புடைய விண்ணப்பதாரர்கள் குறிப்பு 6 மற்றும் 7 இன் மீது கவனம் செலுத்திச் செயற்படுதல் வேண்டும்.

**07. பரீட்சைக்குத் தோற்றுதல் :**

7.1 விண்ணப்பதாரர் ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதிப் பத்திரத்தில் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டு, முதன்முதலாக அந்த மண்டபத்தில் தோற்றும் தினத்தன்று அதனை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட வேண்டும். அவ்விதிமுறைகளை மீறும்பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக நேரிடும்.

<u>குறிப்பு 11</u>

விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது இப்பதவியை வகிப்பதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாகக் கருதப்படமாட்டாது என்பதுடன், பரீட்சையில் சித்தியடைவது மாத்திரம் நியமனம் பெறுவதற்கான ஒரு தகைமையாகவும் கருதப்படமாட்டாது.

**08. பரீட்சார்த்தியின் அடையாளத்தை உறுதிப்படுத்தல்:**

8.1 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை,
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு,
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்,

மேலும், பரீட்சார்த்திகள் தமது அடையாளம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்கள் எவற்றையும் அணியவில்லை என்பதையும் உறுதிப்படுத்தும் வகையில், முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்துடன், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல் பரீட்சை முடிந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதவாறு இருத்தல் வேண்டும்.

**09. தவறான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை :**

விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது மிகுந்த அவதானத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் விதிமுறைகளின்படி, எவரேனும் ஒரு விண்ணப்பதாரருக்கு தகைமைகள் இல்லை என்பது கண்டறியப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் காலப்பகுதியிலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பதாரர் உரிமை இரத்துச் செய்யப்படும்.

**10. பாடத்திட்டம்:**

10.1 எழுத்து மூலப் பரீட்சை

இப்பரீட்சைக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள வினாத்தாள்களின் எண்ணிக்கை இரண்டாகும். தகைமை பெறுவதற்கு இரண்டு வினாத்தாள்களுக்கும் தோற்றுவது கட்டாயமாகும்.

(i). உளச்சார்பு – காலம் ஒரு மணித்தியாலம். (01) (100 புள்ளிகள்)
எண் கணிதம், மொழியியல் மற்றும் உருவ அமைப்பு ரீதியான கட்டமைப்புகள் மற்றும் அவற்றுக்கிடையிலான தொடர்புகள் குறித்து முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பான பகுப்பாய்வுத் திறன், தர்க்கரீதியான புரிந்துணர்வு, வரைவிலக்கணப்படுத்தும் ஆற்றல், ஏனைய சூழ்நிலைகளுக்குப் பிரயோகிக்கும் திறன், அளவீடு செய்தல், காலம் மற்றும் வெளி ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகளைப் புரிந்துகொள்வதில் விண்ணப்பதாரர் கொண்டுள்ள திறமையை அளவிடுவது எதிர்பார்க்கப்படுகிறது. இது ஐம்பது (50) பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்பட வேண்டும்.

(ii). பொது அறிவு - காலம் ஒரு மணித்தியாலம். (01) (100 புள்ளிகள்)
ஆசிரியர் துறை சார்ந்த பொது அறிவு மற்றும்/அல்லது உள்நாட்டில் இடம்பெற்ற மற்றும் இடம்பெற்று வருகின்ற கல்விப் போக்குகள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி, உயர் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, ஆசிரியர் கல்வி போன்ற துறைகள் சம்பந்தமாக 2010 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டங்கள் குறித்த பொது அறிவைப் பரிசோதிக்கும் வகையில் 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாக இது அமையும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்பட வேண்டும்.

10.2 பொது நேர்முகப் பரீட்சை

பொது நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

<u>குறிப்பு 12</u>

எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் -

சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கமைய வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவித்தல் அல்லது செய்திப் பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனரா எனப் பரிசோதித்தல் மற்றும் உடல் தகைமைகளைப் பரிசோதித்தல்.

10.3 செயன்முறைப் பரீட்சை

செயன்முறைப் பரீட்சையாக, விண்ணப்பதாரரினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு தலைப்பின் கீழ் முன்வைப்பு ஒன்று செய்யப்பட வேண்டும். இதற்காக ஐந்து (05) நிமிடங்களுக்கு குறையாத நேரம் வழங்கப்படும். இதற்கு பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| *தொடர் இல* | *செயன்முறைப் பரீட்சையின் போது புள்ளி வழங்கப்படும் நியதிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடையத் தேவையான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | குறிக்கோள் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03 | தொடர்பாடலில் தெளிவு | 05 | 02 |

| *தொடர் இல* | *செயன்முறைப் பரீட்சையின் போது புள்ளி வழங்கப்படும் நியதிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடையத் தேவையான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | முன்வைப்பு நுட்பமுறைகளின் பயன்பாடு | 05 | 02 |
| | மொத்தப் புள்ளிகள் | 25 | 10 |

<u>குறிப்பு 13</u>

எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் -

ஆசிரியர் பணியில் மிக முக்கியமாகக் கருதப்படும் கற்றல்-கற்பித்தல் செயல்முறை தொடர்பாக விண்ணப்பதாரர் கொண்டுள்ள திறமையை அளவிடுதல்.

<u>கவனத்தில் கொள்க-</u> எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 2.8 நிபந்தனையின் படி, தான் விண்ணப்பிக்கும் பாடசாலை வகையின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்காகச் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெறுவாராயின், அவர் தகுதி பெறும் அனைத்துப் பாடங்களுக்கும் உரியவாறு தெரிவு செய்யப்பட்ட தலைப்புகளின் கீழ் முன்வைப்புக்களைச் செய்வதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். செயன்முறைப் பரீட்சைக்கான சபை, விண்ணப்பதாரரின் விருப்பத்தையும் கருத்திற் கொண்டு, தெரிவு செய்யப்பட்ட ஒரு தலைப்பின் கீழ் மாத்திரம் முன்வைப்பினை செய்வதற்கு வாய்ப்பளிக்கும்.

10.3.1செயன்முறைப் பரீட்சைக்கான நடைமுறை

(i) செயன்முறைப் பரீட்சைக்காக ஐந்து (05) நிமிடங்களுக்கு குறையாத நேரம் வழங்கப்படும்

(ii) செயன்முறைப் பரீட்சைக்காகப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் கூடிய புள்ளிகள் இருபத்தைந்து (25) ஆகும்

(iii) செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு மதிப்பீட்டு நியதிகளுக்கும் குறைந்தது இரண்டு (02) புள்ளிகள் வீதம் பெறப்பட வேண்டும்.

(iv) தேசிய பாடசாலைகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு, கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளரினாலும், மாகாண பாடசாலைகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு, மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினாலும் செயன்முறைப் பரீட்சை நடாத்தப்படும்.

10.3.2 நியதிகளின் நோக்கங்கள்

(i) குறிக்கோள் மற்றும் பிரவேசம்
பாடத்தின் குறிக்கோள்களை தெளிவாக விளக்குதல் மற்றும் பாடத்திற்குள் பிரவேசிக்கும் திறனை மதிப்பிடுதல்

( ii) ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு
ஒரு ஆசிரியராகச் சிறந்த ஆளுமையைக் கொண்டிருத்தல் மற்றும் கற்பித்தலின் போது குரலைச் சீராகக் கையாளும் திறனை மதிப்பிடுதல்.

(iii) தொடர்பாடலில் தெளிவு
கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது விடயங்களை வினைத்திறனாகத் தொடர்பாடல் மேற்கொள்ளும் திறனை மதிப்பிடுதல்.

(iv) நேர முகாமைத்துவம்
வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் பாடத்தின் நோக்கத்தை அடைந்துகொள்ளும் ஆற்றலை மதிப்பிடுதல்.

(v) முன்வைப்பு நுட்பமுறைகளின் பயன்பாடு
குறிக்கோளை அடைந்துகொள்வதற்காக முன்வைப்பு நுட்பமுறைகளை நேர்த்தியாக பயன்படுத்தும் திறனை மதிப்பிடுதல்

கவனத்தில் கொள்க - இந்த வர்த்தமானி அறிவித்தலின் 10.3 பிரிவின்படி, ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்காகச் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றத் தயாராக இருக்க வேண்டிய விண்ணப்பதாரர்களுக்கு, விண்ணப்பதாரரின் விருப்பத்தையும் கருத்திற் கொண்டு, தெரிவு செய்யப்பட்ட ஒரு பாடத்திற்குரிய தலைப்பின் கீழ் மாத்திரம் முன்வைப்பினை செய்வதற்குச் செயன்முறைப் பரீட்சைச் சபையினால் வாய்ப்பளிக்கப்படும்.

**11. பரீட்சைக் கட்டணம்:**

11.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 2,700/- (ரூபாய் இரண்டாயிரத்து எழுநூறு) ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகழ்நிலை முறைமை ஊடாக வழங்கப்படும் பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் கீழ் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும்.

I. எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

II. இணையக் கொடுப்பனவு வசதிகள் செயற்படுத்தப்பட்டுள்ள வங்கி வரவு அட்டை மூலம் (Through any Bank Debit Card with Internet Transaction Facilities)

III. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை ஊடாக ( Bank of Ceylon Online Banking Method)

IV. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளை ஊடாகவும் ( Bank of Ceylon Teller Slip Payments)

<u>குறிப்பு 14</u>

மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வது தொடர்பான அறிவுறுத்தல்கள், இணையத் தளத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பு 2 இன் கீழ் உள்ளடக்கப்படும் விண்ணப்பதாரராயின், ஏற்கனவே செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் இதற்கும் பொருந்தும்.

11.2 கொடுப்பனவு கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் ஊடாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுமையான தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாகச் செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகளுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்கமாட்டாது.

11.3 பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீள வழங்கப்படமாட்டாது அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது

**12. பரீட்சைப் பெறுபேறுகள்:**

12.1 எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்றிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின், எழுத்து மூலப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான விண்ணப்பதாரர்களை உள்ளடக்கியதாக இறுதிப் பெறுபேற்றுப் பட்டியல் தயாரிக்கப்படும். தேசிய பாடசாலைகளுக்கு மாத்திரம் விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளருக்கும், மாகாண பாடசாலைகளுக்கு மாத்திரம் விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கும், தேசிய மற்றும் மாகாண ஆகிய இரண்டு வகை பாடசாலைகளுக்கும் விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் அமைச்சின் செயலாளர் மற்றும் உரிய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு ஆகிய இரு தரப்பினருக்கும் வழங்கப்படும். நியமன அதிகாரி பெறுபேறுகளை வெளியிடுவதற்கு பொருத்தமான திகதியை அறிவித்த பின்னர், பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அறிவிப்பதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பார். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதியானது.

**13. விண்ணப்பப்படிவங்களை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் அட்டவணைகளைப் (01, 02, 03, 04 மற்றும் 05) பயன்படுத்தி நிகழ்நிலை விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 01**

| *மொழி மூலம்* | *குறியீட்டு இல.* |
|---|---|
| சிங்கள மொழிமூலம் | 2 |
| தமிழ் மொழிமூலம் | 3 |
| ஆங்கில மொழிமூலம் | 4 |

**அட்டவணை 02**

| *பாடசாலை வகை* | *குறியீட்டு இல.* |
|---|---|
| தேசிய பாடசாலைகள் மட்டும் | 1 |
| மாகாணப் பாடசாலைகள் மட்டும் | 2 |
| தேசிய மற்றும் மாகாண இரு வகைப் பாடசாலைகளும் | 3 |

**அட்டவணை 03**

| *மாகாணம்* | *குறியீட்டு இல.* |
|---|---|
| மேல் மாகாணம் | 01 |
| மத்திய மாகாணம் | 02 |
| தென் மாகாணம் | 03 |
| வடக்கு மாகாணம் | 04 |
| கிழக்கு மாகாணம் | 05 |
| வடமேல் மாகாணம் | 06 |
| வட மத்திய மாகாணம் | 07 |
| ஊவா மாகாணம் | 08 |
| சபரகமுவ மாகாணம் | 09 |

**அட்டவணை 04**

| *மாவட்டம்/ நகரம்* | *குறியீட்டு இல.* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலனறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகல | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

## அட்டவணை 05

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தேசிய பாடசாலைகள் | | | மாகாணப் பாடசாலைகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மேல் மாகாணம் | | | வடமத்திய மாகாணம் | | | வடக்கு மாகாணம் | | |
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 101 | இரசாயனவியல் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | | √ | √ |
| 102 | பௌதீகவியல் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | | √ | √ |
| 103 | உயிரியல் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | | √ | √ |
| 104 | விவசாய விஞ்ஞானம் | √ | √ | √ | √ | √ | | √ | √ | | | √ | √ |
| 105 | இணைந்த கணிதம் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | | | |
| 106 | பொறியியல் தொழில்நுட்பம் | √ | √ | √ | √ | √ | | √ | √ | | | √ | |
| 107 | உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் | √ | √ | √ | √ | √ | | √ | √ | | | √ | |
| 108 | தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் | √ | √ | √ | √ | √ | | √ | √ | | | √ | |
| 109 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | | √ | √ |
| 110 | கணக்கீடு | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | | √ | √ |
| 111 | வணிகக் கல்வி | √ | √ | √ | √ | √ | | √ | √ | | | | |
| 112 | வணிக புள்ளிவிபரவியல் | √ | √ | √ | √ | √ | | √ | √ | | | | |
| 113 | அளவையியல் மற்றும் விஞ்ஞான முறை | √ | √ | √ | √ | √ | | √ | √ | | | | |
| 114 | பொருளியல் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | | √ | |
| 115 | புவியியல் | √ | √ | √ | √ | √ | | √ | √ | | | √ | √ |
| 116 | அரசியல் விஞ்ஞானம் | √ | √ | √ | √ | √ | | √ | √ | | √ | √ | √ |
| 117 | மனைப் பொருளியல் | √ | √ | √ | √ | √ | | √ | | | √ | √ | |
| 118 | வரலாறு (இலங்கை வரலாற்றுடன் இந்திய/ஐரோப்பிய/நவீன உலக) | √ | √ | | √ | | | √ | √ | | | √ | √ |
| 119 | தொடர்பாடல் மற்றும் ஊடகக்கல்வி | √ | √ | √ | √ | | | √ | | | | √ | |
| 120 | பௌத்த நாகரீகம் | √ | | | √ | | | √ | | | √ | | |
| 121 | கிறிஸ்தவ நாகரீகம் | √ | √ | √ | √ | √ | | | √ | | | √ | √ |
| 122 | இந்து நாகரீகம் | √ | √ | √ | √ | √ | | | | | | √ | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தேசிய பாடசாலைகள் | | | மாகாணப் பாடசாலைகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மேல் மாகாணம் | | | வடமத்திய மாகாணம் | | | வடக்கு மாகாணம் | | |
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 123 | இஸ்லாமிய நாகரீகம் | √ | √ | √ | | √ | | | √ | | | √ | |
| 124 | பௌத்த சமயம் | √ | | √ | √ | | | | | | | | |
| 125 | இந்து சமயம் | √ | √ | √ | | | | | | | | | |
| 126 | கிறிஸ்தவ சமயம் | √ | √ | √ | √ | | | | √ | | | | |
| 127 | இஸ்லாம் | √ | √ | √ | √ | √ | √ | | √ | | | √ | |
| 128 | சித்திரக் கலை | √ | √ | √ | √ | | | √ | | | | | |
| 129 | நடனம் (தேசிய) | | | | √ | | | √ | | | | | |
| 130 | நடனம் (பரதம்) | | √ | | | | | | | | | | |
| 131 | கீழைத்தேய சங்கீதம் | √ | | | √ | | | √ | | | | | |
| 132 | கர்நாடக சங்கீதம் | | √ | | | | | | | | | | |
| 133 | மேலைத்தேய சங்கீதம் | | | √ | | | | | | | | | |
| 134 | நாடகம் மற்றும் அரங்கற்கலை | √ | √ | | √ | | | √ | | | | √ | |
| 135 | சிங்களம் | √ | | | √ | | | √ | | | | | |
| 136 | தமிழ் | | √ | | | √ | | | √ | | | √ | |
| 137 | ஆங்கிலம் | | | √ | | | √ | | | √ | | | √ |
| 138 | அரபு | √ | √ | √ | | | | | | | | | |
| 139 | பிரெஞ்சு | √ | √ | √ | | | | | | | | | |
| 140 | சீனா | √ | √ | √ | | | | | | | | | |
| 141 | யப்பான் | √ | √ | √ | | | | | | | | | |
| 142 | ஜெர்மன் | √ | √ | √ | | | | √ | | | | | |
| 143 | ரஷ்யன் | √ | √ | √ | | | | | | | | | |
| 144 | மலே | √ | √ | √ | | | | | | | | | |
| 145 | ஹிந்தி | √ | √ | √ | | | | | | | | | |
| 146 | கொரியா | √ | √ | √ | | | | √ | | | | | |
| 201 | குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு | √ | √ | | | | | | √ | | | √ | |
| 202 | சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு | √ | √ | | | | | √ | √ | | √ | √ | |
| 203 | உடற் கல்வி மற்றும் விளையாட்டு | √ | √ | | √ | | | √ | √ | | | √ | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தேசிய பாடசாலைகள் | | | மாகாணப் பாடசாலைகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மேல் மாகாணம் | | | வடமத்திய மாகாணம் | | | வடக்கு மாகாணம் | | |
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 204 | அரங்கற் கலை | √ | √ | | √ | | | √ | | | | √ | |
| 205 | நிகழ்ச்சி முகாமைத்துவம் | | √ | | √ | | | √ | | | | √ | |
| 206 | நுண்கலை | √ | √ | | | | | √ | | | | √ | |
| 207 | உள்ளக வடிவமைப்பு | √ | √ | | √ | √ | | √ | | | | √ | |
| 208 | நவநாகரீக வடிவமைப்பு | √ | √ | | √ | | | √ | | | | √ | |
| 209 | கிரபிக் வடிவமைப்பு | √ | √ | | √ | | | √ | | | | √ | |
| 210 | நிலத்தோற்ற வடிவமைப்பு | √ | √ | | √ | √ | | √ | √ | | | √ | |
| 211 | பிரயோக தோட்டக் கலை தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | | | | √ | √ | | | √ | |
| 212 | கால்நடை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | | | | √ | | | | √ | |
| 213 | உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | | | √ | √ | | | √ | |
| 214 | நீரியல் வளங்கள் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | | | √ | √ | | | √ | |
| 215 | பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | | | √ | | | | | |
| 216 | நிர்மாணத் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | | √ | √ | | | √ | |
| 217 | மோட்டார் இயந்திரவியல் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | | √ | √ | | | √ | |
| 218 | மின்சார மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | | √ | √ | | | √ | |
| 219 | புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைத் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | | | | √ | √ | | | √ | |
| 220 | உலோக புனைவுத் தொழில்நுட்பக் கல்வி | √ | | | | | | √ | | | | √ | |
| 221 | அலுமினியம் புனைவுத் தொழில்நுட்பக் கல்வி | | √ | | √ | √ | | √ | √ | | | √ | |
| 222 | கணிணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு | √ | √ | | √ | √ | | √ | | | | √ | |
| 223 | உற்பத்தி | | √ | | √ | √ | | √ | | | | √ | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தேசிய பாடசாலைகள் | | | மாகாணப் பாடசாலைகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மேல் மாகாணம் | | | வடமத்திய மாகாணம் | | | வடக்கு மாகாணம் | | |
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 224 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | √ | √ | | √ | √ | | √ | √ | | | √ | |
| 225 | வழங்கல்கள் முகாமைத்துவம் | √ | √ | | √ | √ | | | √ | | | | |
| 226 | சந்தைப்படுத்தல் | √ | √ | | √ | √ | | √ | | | | | |
| 301 | மாணவர் ஆலோசனை | √ | √ | √ | √ | √ | | √ | √ | | √ | √ | |
| 302 | விசேட கல்வி | √ | √ | √ | √ | √ | | √ | √ | | √ | √ | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | கிழக்கு மாகாணம் | | | மத்திய மாகாணம் | | | வடமேல் மாகாணம் | | | சபரகமுவ மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 101 | இரசாயனவியல் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | |
| 102 | பௌதீகவியல் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | |
| 103 | உயிரியல் | √ | √ | | √ | √ | | √ | √ | √ | √ | | |
| 104 | விவசாய விஞ்ஞானம் | | √ | | √ | | | √ | | √ | √ | | |
| 105 | இணைந்த கணிதம் | √ | √ | | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | |
| 106 | பொறியியல் தொழில்நுட்பம் | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | |
| 107 | உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | | |
| 108 | தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | |
| 109 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | √ | √ | | √ | √ | √ | √ | √ | | √ | √ | |
| 110 | கணக்கீடு | √ | √ | | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | கிழக்கு மாகாணம் | | | மத்திய மாகாணம் | | | வடமேல் மாகாணம் | | | சபரகமுவ மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 111 | வணிகக் கல்வி | √ | √ | | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| 112 | வணிக புள்ளிவிபரவியல் | √ | √ | | √ | | | √ | √ | √ | √ | | |
| 113 | அளவையியல் மற்றும் விஞ்ஞான முறை | √ | √ | | √ | | | √ | | | √ | | |
| 114 | பொருளியல் | √ | √ | | √ | √ | √ | √ | √ | | √ | √ | √ |
| 115 | புவியியல் | √ | √ | | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | |
| 116 | அரசியல் விஞ்ஞானம் | √ | √ | | √ | √ | √ | √ | √ | | √ | √ | |
| 117 | மனைப் பொருளியல் | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | |
| 118 | வரலாறு (இலங்கை வரலாற்றுடன் இந்திய/ ஐரோப்பிய/நவீன உலக) | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | | |
| 119 | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | |
| 120 | பௌத்த நாகரீகம் | √ | | | √ | | | √ | | | √ | | |
| 121 | கிறிஸ்தவ நாகரீகம் | √ | √ | | | | | | √ | | | | |
| 122 | இந்து நாகரீகம் | | √ | | | √ | | | √ | | | √ | |
| 123 | இஸ்லாமிய நாகரீகம் | | √ | | | √ | √ | | √ | | | √ | |
| 124 | பௌத்த சமயம் | | | | √ | | | | | | √ | | |
| 125 | இந்து சமயம் | | √ | | | √ | | | √ | | | | |
| 126 | கிறிஸ்தவ சமயம் | | | | | | | √ | √ | | | | |
| 127 | இஸ்லாம் | | √ | | | √ | √ | √ | √ | | | | |
| 128 | சித்திரக் கலை | | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | |
| 129 | நடனம் (தேசிய) | | | | √ | | | √ | | | √ | | |
| 130 | நடனம் (பரதம்) | | √ | | | √ | | | | | | | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | கிழக்கு மாகாணம் | | | மத்திய மாகாணம் | | | வடமேல் மாகாணம் | | | சபரகமுவ மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 131 | கீழைத்தேய சங்கீதம் | | | | √ | | | √ | | | √ | | |
| 132 | கர்நாடக சங்கீதம் | | √ | | | √ | | | | | | | |
| 133 | மேலைத்தேய சங்கீதம் | | | | | | | | | √ | | | |
| 134 | நாடகம் மற்றும் அரங்கற்கலை | | √ | | √ | | | √ | | | √ | | |
| 135 | சிங்களம் | √ | | | √ | | | √ | | | √ | | |
| 136 | தமிழ் | | √ | | | √ | | | √ | | | √ | |
| 137 | ஆங்கிலம் | | | | | | √ | | | √ | | | √ |
| 138 | அரபு | | | | | √ | | | √ | | | | |
| 139 | பிரெஞ்சு | | | | | | | | | | √ | | |
| 140 | சீனா | | | | | | | √ | | | | | |
| 141 | யப்பான் | | | | √ | | | √ | √ | | √ | | |
| 142 | ஜெர்மன் | | | | | | | √ | | | | | |
| 143 | ரஷ்யன் | | | | | | | | | | | | |
| 144 | மலே | | | | | | | | | | | | |
| 145 | ஹிந்தி | | | | | | | | | | | | |
| 146 | கொரியா | | | | | | | √ | | | | | |
| 201 | குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு | √ | √ | | | | | | √ | | | √ | |
| 202 | சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு | √ | √ | | | | | √ | √ | | √ | √ | |
| 203 | உடற் கல்வி மற்றும் விளையாட்டு | √ | √ | | √ | | | √ | √ | | | √ | |
| 204 | அரங்கற் கலை | √ | √ | | √ | | | √ | | | | √ | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | கிழக்கு மாகாணம் | | | மத்திய மாகாணம் | | | வடமேல் மாகாணம் | | | சபரகமுவ மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 205 | நிகழ்ச்சி முகாமைத்துவம் | | √ | | √ | | | √ | | | | √ | |
| 206 | நுண்கலை | √ | √ | | | | | √ | | | | √ | |
| 207 | உள்ளக வடிவமைப்பு | √ | √ | | √ | √ | | √ | | | | √ | |
| 208 | நவநாகரீக வடிவமைப்பு | √ | √ | | √ | | | √ | | | | √ | |
| 209 | கிரபிக் வடிவமைப்பு | √ | √ | | √ | | | √ | | | | √ | |
| 210 | நிலத்தோற்ற வடிவமைப்பு | √ | √ | | √ | √ | | √ | √ | | | √ | |
| 211 | பிரயோக தோட்டக் கலை தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | | | | √ | √ | | | | |
| 212 | கால்நடை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | | | | √ | | | | | |
| 213 | உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | | | √ | √ | | | | |
| 214 | நீரியல் வளங்கள் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | | | √ | √ | | | | |
| 215 | பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | | | √ | | | | | |
| 216 | நிர்மாணத் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | | √ | √ | | | | |
| 217 | மோட்டார் இயந்திரவியல் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | | √ | √ | | | | |
| 218 | மின்சார மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | | √ | √ | | | | |
| 219 | புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைத் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | | | | √ | √ | | | | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | கிழக்கு மாகாணம் | | | மத்திய மாகாணம் | | | வடமேல் மாகாணம் | | | சபரகமுவ மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 220 | உலோக புனைவுத் தொழில்நுட்பக் கல்வி | √ | | | | | | √ | | | | | |
| 221 | அலுமினியம் புனைவுத் தொழில்நுட்பக் கல்வி | | √ | | √ | √ | | √ | √ | | | | |
| 222 | கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு | √ | √ | | √ | √ | | √ | | | | | |
| 223 | உற்பத்தி | | √ | | √ | √ | | √ | | | | | |
| 224 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | √ | √ | | √ | √ | | √ | √ | | | | |
| 225 | வழங்கல்கள் முகாமைத்துவம் | √ | √ | | √ | √ | | | √ | | | | |
| 226 | சந்தைப்படுத்தல் | √ | √ | | √ | √ | | √ | | | | | |
| 301 | மாணவர் ஆலோசனை | | | | √ | √ | | | √ | | √ | | |
| 302 | விசேட கல்வி | | | | √ | √ | | | √ | | | | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தென் மாகாணம் | | | ஊவா மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 101 | இரசாயனவியல் | √ | | | √ | √ | |
| 102 | பௌதீகவியல் | √ | | | √ | √ | |
| 103 | உயிரியல் | √ | | | | √ | |
| 104 | விவசாய விஞ்ஞானம் | √ | | | √ | √ | |
| 105 | இணைந்த கணிதம் | √ | | | √ | √ | |
| 106 | பொறியியல் தொழில்நுட்பம் | √ | | | √ | | |
| 107 | உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் | √ | | | √ | √ | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தென் மாகாணம் | | | ஊவா மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 108 | தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் | √ | | | √ | √ | |
| 109 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | √ | √ | √ | √ | √ | |
| 110 | கணக்கீடு | √ | √ | | √ | √ | |
| 111 | வணிகக் கல்வி | √ | √ | | √ | √ | |
| 112 | வணிக புள்ளிவிபரவியல் | √ | | | √ | √ | |
| 113 | அளவையியல் மற்றும் விஞ்ஞான முறை | √ | | | | | |
| 114 | பொருளியல் | √ | √ | | √ | √ | |
| 115 | புவியியல் | √ | √ | | √ | √ | |
| 116 | அரசியல் விஞ்ஞானம் | √ | | | √ | √ | |
| 117 | மனைப் பொருளியல் | √ | | | | √ | |
| 118 | வரலாறு (இலங்கை வரலாற்றுடன் இந்திய/ஐரோப்பிய/ நவீன உலக) | √ | | | √ | | |
| 119 | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி | √ | | | √ | √ | |
| 120 | பௌத்த நாகரீகம் | √ | | | √ | | |
| 121 | கிறிஸ்தவ நாகரீகம் | √ | | | | √ | |
| 122 | இந்து நாகரீகம் | | √ | | | √ | |
| 123 | இஸ்லாமிய நாகரீகம் | | √ | | | √ | |
| 124 | பௌத்த சமயம் | | | | | | |
| 125 | இந்து சமயம் | | | | | | |
| 126 | கிறிஸ்தவ சமயம் | √ | | | | | |
| 127 | இஸ்லாம் | √ | √ | | | √ | |
| 128 | சித்திரக் கலை | √ | √ | | √ | √ | |
| 129 | நடனம் (தேசிய) | √ | | | √ | | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தென் மாகாணம் | | | ஊவா மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 130 | நடனம் (பரதம்) | √ | | | | √ | |
| 131 | கீழைத்தேய சங்கீதம் | √ | | | √ | | |
| 132 | கர்நாடக சங்கீதம் | | | | | √ | |
| 133 | மேலைத்தேய சங்கீதம் | | | | | | |
| 134 | நாடகம் மற்றும் அரங்கற்கலை | √ | | | √ | √ | |
| 135 | சிங்களம் | √ | | | √ | | |
| 136 | தமிழ் | | √ | | | √ | |
| 137 | ஆங்கிலம் | | | √ | | | |
| 138 | அரபு | | | | | | |
| 139 | பிரெஞ்சு | | | | | | |
| 140 | சீனா | | | | | | |
| 141 | யப்பான் | | | | | | |
| 142 | ஜெர்மன் | | | | √ | | |
| 143 | ரஷ்யன் | | | | | | |
| 144 | மலே | | | | | | |
| 145 | ஹிந்தி | | | | | | |
| 146 | கொரியா | | | | | | |
| 201 | குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு | √ | √ | | √ | √ | |
| 202 | சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு | √ | | | √ | | |
| 203 | உடற் கல்வி மற்றும் விளையாட்டு | √ | √ | | √ | √ | |
| 204 | அரங்கற் கலை | √ | √ | | √ | √ | |
| 205 | நிகழ்ச்சி முகாமைத்துவம் | √ | | | √ | √ | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தென் மாகாணம் | | | ஊவா மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 206 | நுண்கலை | √ | | | √ | √ | |
| 207 | உள்ளக வடிவமைப்பு | √ | | | √ | √ | |
| 208 | நவநாகரீக வடிவமைப்பு | √ | √ | | √ | √ | |
| 209 | கிரபிக் வடிவமைப்பு | √ | | | √ | √ | |
| 210 | நிலத்தோற்ற வடிவமைப்பு | √ | | | √ | √ | |
| 211 | பிரயோக தோட்டக் கலை தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | | |
| 212 | கால்நடை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி | | | | √ | | |
| 213 | உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | |
| 214 | நீரியல் வளங்கள் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | | |
| 215 | பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | |
| 216 | நிர்மாணத் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | |
| 217 | மோட்டார் இயந்திரவியல் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | |
| 218 | மின்சார மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | |
| 219 | புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைத் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | |
| 220 | உலோக புனைவுத் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | √ | |
| 221 | அலுமினியம் புனைவுத் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | | √ | | |
| 222 | கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு | √ | √ | | √ | √ | |
| 223 | உற்பத்தி | √ | √ | | √ | | |
| 224 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | √ | √ | | √ | √ | |
| 225 | வழங்கல்கள் முகாமைத்துவம் | √ | √ | | √ | | |
| 226 | சந்தைப்படுத்தல் | √ | | | √ | √ | |
| 301 | மாணவர் ஆலோசனை | √ | √ | | √ | √ | |
| 302 | விசேட கல்வி | √ | √ | | √ | √ | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தேசிய பாடசாலைகள் | | | மாகாணப் பாடசாலைகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மேல் மாகாணம் | | | வடமத்திய மாகாணம் | | | வடக்கு மாகாணம் | | |
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 401 | விஞ்ஞானம் | √ | √ | √ | √ | √ | | √ | √ | √ | √ | √ | √ |
| 402 | கணிதம் | √ | √ | √ | √ | √ | | √ | √ | √ | √ | √ | √ |
| 403 | சிங்கள மொழியும் இலக்கியமும் | √ | | | √ | | | √ | | | | | |
| 404 | தமிழ் மொழியும் இலக்கியமும் | | √ | | | √ | | | √ | | | | |
| 405 | ஆங்கில மொழி | | | √ | | | √ | | | √ | | | √ |
| 406 | வரலாறு | | √ | √ | √ | √ | √ | √ | √ | | √ | √ | |
| 407 | புவியியல் | √ | √ | √ | √ | | | √ | √ | √ | √ | √ | |
| 408 | குடியுரிமைக் கல்வி | √ | √ | √ | | | | √ | √ | √ | √ | √ | |
| 409 | வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | | | √ | |
| 410 | முயற்சியாண்மைக் கற்கை | √ | √ | √ | √ | √ | | √ | √ | | | √ | |
| 411 | பிரெஞ்சு | √ | √ | √ | | | | | | | | | |
| 412 | ஹிந்தி | √ | √ | √ | | | | | | | | | |
| 413 | ஜப்பானிய | √ | √ | √ | √ | | | √ | | | | | |
| 414 | அரபு | | √ | √ | √ | | | | √ | | | | |
| 415 | ஜெர்மன் | √ | | √ | | | | | | | | | |
| 416 | சீன | √ | √ | | | | | | | | | | |
| 417 | ரஷ்யன் | | | | | | | | | | | | |
| 418 | கொரியா | √ | √ | | √ | | | | | | | | |
| 419 | இரண்டாம் மொழி (சிங்களம்) | | √ | | | √ | | | √ | | | √ | |
| 420 | இரண்டாம் மொழி (தமிழ்) | √ | | | √ | | | √ | | | √ | | |
| 421 | சங்கீதம் (கீழைத்தேய) | √ | | | √ | | | √ | | | √ | | |
| 422 | சங்கீதம் (மேலைத்தேய) | | | √ | | | √ | | | | | | √ |
| 423 | சங்கீதம் (கர்நாடக) | | √ | | | √ | | | √ | | | | |
| 424 | சித்திரம் | √ | √ | √ | √ | √ | | √ | √ | | √ | √ | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தேசிய பாடசாலைகள் | | | மாகாணப் பாடசாலைகள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மேல் மாகாணம் | | | வடமத்திய மாகாணம் | | | வடக்கு மாகாணம் | | |
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 425 | நடனம் (தேசிய) | √ | | | √ | | | √ | | | √ | | |
| 426 | நடனம் (பரதம்) | √ | √ | | √ | √ | | √ | √ | | | √ | |
| 427 | நாடகமும் அரங்கியலும் | √ | √ | | √ | √ | | √ | √ | | | | |
| 428 | இலக்கிய நயம் (சிங்களம்) | √ | | | √ | | | √ | | | | | |
| 429 | இலக்கிய நயம் (தமிழ்) | | √ | | | √ | | | √ | | | | |
| 430 | இலக்கிய நயம் (ஆங்கிலம்) | | | √ | | | √ | | | √ | | | |
| 431 | இலக்கிய நயம் (அரபு) | | √ | | | | | | √ | | | | |
| 432 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | √ | √ | √ | √ | √ | | √ | √ | | √ | √ | √ |
| 433 | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | √ | √ | √ | √ | √ | | √ | √ | | √ | √ | |
| 434 | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | √ | √ | | √ | | | | | | | | |
| 435 | நுண்கலை | √ | √ | | √ | | | | | | | | |
| 436 | மனைப் பொருளியல் | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | |
| 437 | பிரயோக மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் | | | | √ | | | √ | √ | | | √ | |
| 438 | வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் | √ | | | √ | | | √ | √ | | | | |
| 439 | சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | |
| 440 | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி | √ | √ | √ | √ | √ | | √ | | | | | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | கிழக்கு மாகாணம் | | | மத்திய மாகாணம் | | | வடமேல் மாகாணம் | | | சப்பிரகமுவ மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 401 | விஞ்ஞானம் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| 402 | கணிதம் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| 403 | சிங்கள மொழியும் இலக்கியமும் | √ | | | √ | | | √ | | | √ | | |
| 404 | தமிழ் மொழியும் இலக்கியமும் | | √ | | | √ | | | √ | | | √ | |
| 405 | ஆங்கில மொழி | | | √ | | | √ | | | √ | | | √ |
| 406 | வரலாறு | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | √ |
| 407 | புவியியல் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| 408 | குடியுரிமைக் கல்வி | √ | √ | √ | √ | √ | √ | | √ | √ | √ | √ | √ |
| 409 | வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| 410 | முயற்சியாண்மைக் கற்கை | √ | √ | | √ | √ | | √ | √ | √ | √ | √ | √ |
| 411 | பிரெஞ்சு | | | | | | √ | | | | | | |
| 412 | ஹிந்தி | | | | | | | √ | | | | | |
| 413 | ஜப்பானிய | | | | √ | | | √ | √ | | | | |
| 414 | அரபு | | √ | | | | | | | | | | √ |
| 415 | ஜெர்மன் | | | | | | | | √ | | √ | | |
| 416 | சீன | | | | | | | | | | √ | | |
| 417 | ரஷ்யன் | | | | | | | √ | | | | | |
| 418 | கொரியா | | | | | | | | | | | | |
| 419 | இரண்டாம் மொழி (சிங்களம்) | | √ | | | √ | | | √ | | | √ | |
| 420 | இரண்டாம் மொழி (தமிழ்) | √ | | | √ | | | √ | | | √ | | |
| 421 | சங்கீதம் (கீழைத்தேய) | √ | | | √ | | | √ | | | √ | | |
| 422 | சங்கீதம் (மேலைத்தேய) | | | | | | √ | | | √ | | | √ |
| 423 | சங்கீதம் (கர்நாடக) | | √ | | | √ | | | √ | | | √ | |
| 424 | சித்திரம் | √ | √ | | √ | √ | √ | √ | √ | | √ | √ | |
| 425 | நடனம் (தேசிய) | √ | | | √ | | | √ | | | √ | | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | கிழக்கு மாகாணம் | | | மத்திய மாகாணம் | | | வடமேல் மாகாணம் | | | சப்பிரகமுவ மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 426 | நடனம் (பரதம்) | | √ | | | √ | | √ | √ | | | √ | |
| 427 | நாடகமும் அரங்கியலும் | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | |
| 428 | இலக்கிய நயம் (சிங்களம்) | √ | | | √ | | | √ | | | √ | | |
| 429 | இலக்கிய நயம் (தமிழ்) | | √ | | | √ | | | √ | | | √ | |
| 430 | இலக்கிய நயம் (ஆங்கிலம்) | | | √ | | | √ | | | √ | | | √ |
| 431 | இலக்கிய நயம் (அரபு) | | √ | | | √ | | | √ | | | √ | |
| 432 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | √ | | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| 433 | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | √ | √ | | √ | √ | | √ | √ | √ | √ | √ | √ |
| 434 | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | | √ | | √ | | | √ | √ | √ | | | |
| 435 | நுண்கலை | √ | | | √ | | | √ | √ | | | | |
| 436 | மனைப் பொருளியல் | √ | √ | | √ | √ | | √ | √ | | | √ | |
| 437 | பிரயோக மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் | √ | √ | | √ | √ | | √ | √ | | √ | √ | √ |
| 438 | வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் | √ | | | √ | √ | | √ | √ | | | | |
| 439 | சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| 440 | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி | √ | √ | | √ | √ | | √ | √ | √ | √ | √ | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தென் மாகாணம் | | | ஊவா மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 401 | விஞ்ஞானம் | √ | √ | √ | √ | √ | √ |
| 402 | கணிதம் | √ | √ | √ | √ | √ | √ |
| 403 | சிங்கள மொழியும் இலக்கியமும் | √ | | | √ | | |
| 404 | தமிழ் மொழியும் இலக்கியமும் | | √ | | | √ | |
| 405 | ஆங்கில மொழி | | | √ | | | √ |
| 406 | வரலாறு | √ | √ | | √ | √ | |
| 407 | புவியியல் | √ | √ | √ | √ | √ | √ |
| 408 | குடியுரிமைக் கல்வி | √ | √ | | √ | √ | √ |
| 409 | வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி | √ | √ | | √ | √ | |
| 410 | முயற்சியாண்மைக் கற்கை | √ | | | √ | | |
| 411 | பிரெஞ்சு | √ | | | | | |
| 412 | ஹிந்தி | | | | | | |
| 413 | ஜப்பானிய | √ | | | | | |
| 414 | அரபு | | | | | | |
| 415 | ஜெர்மன் | | | | | | |
| 416 | சீன | | | | | | |
| 417 | ரஷ்யன் | | | | | | |
| 418 | கொரியா | √ | | | | | |
| 419 | இரண்டாம் மொழி (சிங்களம்) | | √ | | | √ | |
| 420 | இரண்டாம் மொழி (தமிழ் | √ | | | | | |
| 421 | சங்கீதம் (கீழைத்தேய) | √ | | | √ | | |
| 422 | சங்கீதம் (மேலைத்தேய) | | | √ | | | |
| 423 | சங்கீதம் (கர்நாடக) | | √ | | | √ | |
| 424 | சித்திரம் | √ | √ | | √ | √ | |
| 425 | நடனம் (தேசிய) | √ | | | √ | | |
| 426 | நடனம் (பரதம்) | | √ | | | √ | |
| 427 | நாடகமும் அரங்கியலும் | √ | | | √ | √ | |
| 428 | இலக்கிய நயம் (சிங்களம்) | √ | | | √ | | |
| 429 | இலக்கிய நயம் (தமிழ்) | | √ | | | √ | |
| 430 | இலக்கிய நயம் (ஆங்கிலம்) | | | √ | | | |
| 431 | இலக்கிய நயம் (அரபு) | | | | | √ | |
| 432 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | √ | √ | √ | √ | √ | √ |
| 433 | விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் | √ | | | | | |
| 434 | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | √ | | | | | |
| 435 | நுண்கலை | √ | | | | | |
| 436 | மனைப் பொருளியல் | √ | √ | | | | |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தென் மாகாணம் | | | ஊவா மாகாணம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 437 | பிரயோக மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் | √ | √ | | √ | √ | |
| 438 | வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் | √ | √ | | | | |
| 439 | சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | √ | √ | | √ | √ | √ |
| 440 | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி | √ | √ | | | | |

14. நேர்முகப் பரீட்சைக்காகக் குறிக்கப்பட்ட திகதியில் சமூகமளிக்காத விண்ணப்பதாரிகள் எவ்வகையிலும் மீண்டும் கருத்திற் கொள்ளப்படமாட்டார்கள்.

15. அத்துடன், நேர்முகப்பரீட்சை திகதியன்று அனைத்துச் சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், பின்னர் சமர்ப்பிக்கப்படும் எவ்வித சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

16. தங்களது விண்ணப்பப்படிவத்தில் தாங்கள் குறிப்பிடும் எந்தவொரு விடயத்தையும் பின்னர் மாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

17. இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயம் காணப்படின், அது தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உள்ளது என்பதுடன், ஏதேனும் ஒரு வெற்றிடங்களின் எண்ணிக்கையில் ஒரு பகுதியை அல்லது முழுமையாக நிரப்புவது அல்லது நிரப்பாதிருப்பது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் தேசிய பாடசாலைகளுக்காகக் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கும், மாகாண பாடசாலைகளுக்காக அந்தந்த மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கும் உள்ளது.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமிடத்து, அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**நாலக களுவெவ,**
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சு.

இசுருபாய,
பெலவத்த,
பத்தரமுல்ல,
2026, பெப்புருவரு 02.

EOG 02-0015

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.